வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 04.05.2023 வியாழக்கிழமை இதழ் : 146 பக்கங்கள் : 12




# விகாரைக்கு எதிராக தையிட்டியில் போராட்டம்

## போராடியோரை கைதுசெய்ய முயன்றதால் பதற்றம் நாளை வரையில் தொடர் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 04

**தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து இராணுவத்தால் தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிராக நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், நாளை வெள்ளிக்கிழமை வரை தொடர் போராட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை, போராட்டத்தின் பின்னர் விகாரைப் பகுதியிலிருந்து வெளியேறிய போராட்டக்காரர்களை வீதியை மறித்த பொலிஸாரும் இராணுவத்தினரும் கைது செய்ய முயன்றமையால் நேற்றிரவு அப்பகுதியில் பெரும் பதற்றநிலை உருவானது.

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த தையிட்டியில் ஒரு பகுதி சில மாதங்களுக்கு முன்னர் விடுவிக் கப்பட்டது. எனினும், இந்தப் 11

# ஈ. பி. எவ்வுக்கு ஆபத்தென்று வதந்தியே பரப்பப்படுகிறது

## அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, மே 04

தேசிய மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் இதுவரையில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஆபத்து ஏற்படவுள்ளதாக வதந்திகள் பரப்பப்படுகின்றன - என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாணய நிதியத்தின் ஒப்பந்தம் பகிரங்கப்படுத்தப்பட்டதைப் போன்று கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் வெளிப்படை தன்மையுடனேயே முன்னெடுக்கப்படும் எனவும் 11

# பிராந்திய பாதுகாப்பில் இலங்கை - இந்தியா உறுதி

கொழும்பு, மே 05

இலங்கை - இந்தியா இடையிலான பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புக்கள் தொடர்பில் இரு தரப்பு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணமாக மேற்கொண்டுள்ள இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் வி. ஆர். சௌத்ரி மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் ஆகியோரின் சந்திப்பிலேயே இந்த விடயம் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தியா, இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் உதவிக்கு இதன் போது நன்றி தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பரஸ்பர நன்மை மற்றும் பிராந்திய பாதுகாப்புக்காக 11

# வேட்பாளரான பணியாளர்கள் மீளவும் பணிக்கு!

கொழும்பு, மே 04

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்பாளர்களாக வேட்பு மனு தாக்கல் செய்த அரச உத்தியோகத்தர்கள் மீளவும் பணியில் சேர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த வேட்பாள உத்தியோகத்தர்கள் தாங்கள் போட்டியிடும் வட்டாரத்துக்கு வெளியே பணியாற்றுவோர் எனின் பணிக்கு திரும்பலாம். போட்டியிடும் வட்டாரம் எனின், அந்த வட்டாரத்துக்கு வெளியே இடமாற்றம் செய்து பணிக்கு திரும்ப முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 11



# கிளிநொச்சி அபிவிருத்தி கூட்டத்தில் சகல கட்சி பிரதிநிதிகளும் பங்கேற்பு

கிளிநொச்சி, மே 04

கிளிநொச்சி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் (தேர்தல்) மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான ஜீவன் தியாகராஜாவும் கலந்து கொண்டார். அத்துடன், 11

## ஆலோசனை குழு மூலம் மாகாண சபையை இயக்கக் கோரும் வரைவு

# தமிழ் தேசிய கட்சிகள் ஒப்பமிடப் பின்னடிப்பு!

யாழ்ப்பாணம், மே 04

ஆலோசனை குழு ஒன்றை நியமித்து அதன் ஊடாக மாகாணங்களில் வேலைத் திட்டத்தை முன்னெடுக்க ஜனாதிபதியை கோரும் திட்டத்துக்கு ஆதரவளிக்க தமிழ்த் தேசியக் கட்சிகள் பின்னடித்துள்ளன.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் க. வி. விக்னேஸ்வரன், முன்னாள் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண முதலமைச்சரின் செயலாளர் கே. விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து இதற்கான முன்முயற்சியை எடுத்திருந்தனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் 154ரி உறுப்புரையின் பிரகாரம் - ஆலோசனை சபையை நியமிக்க ஜனாதிபதியை கோரும் இதற்கான 11

# 4 வருடங்களின் பின் ஆளும் சபை கூட்டம்!

கொழும்பு, மே 04

நான்கு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி நிதியத்தின் ஆளும் சபை நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது.

இந்த ஆளும் சபை, ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் உட்பட 7 உறுப்பினர்களை 11

# 14ஆவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு ஏற்பாடு!

## நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு

● நிதி சேகரிப்பு இடம்பெறாது

முல்லைத்தீவு, மே 04

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் 14 ஆவது ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் மே 18ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு - கிழக்கு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைப்பு விடுத்த ஊடக அறிவிப்பில்,

பேரினவாத மேலாதிக்கத்தின் தமிழின அழிப்பு சிந்தனையின் கொடிய கோரப்பற்கள் 11

# மீற்றர் பொருத்தாத ஓட்டோக்களுக்கு தடை

*யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவிப்பு*

**விரிவான செய்தி 14ஆம் பக்கத்தில்**



## இப்படியும் நடக்கிறது...!

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களுக்கும் ஊடகப் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் என்ற வகையில் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இந்த சந்திப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் காலை உணவுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து ஊடகப் பிரதானிகளுடன் கலந்துரையாடுவதற்காக இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக கூறப்பட்டிருந்தது.

இன்று எதிரணியாக பாராளுமன்றில் அமர்ந்திருக்கும் பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் சிலரும் அங்கு அமர்ந்திருந்தனர்.

சிறுபான்மைக் கட்சிகள் என்றால் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒருவர்தான் அங்கு பிரசன்னம். அதிகம் ஏன் ஐக்கிய மக்கள் சக்தியில் பிரதான பங்காளர்களாக இருக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் மனோ கணேசனோ பழனி திகாம்பரம்கூட இல்லை.

அரசின் இன்றைய ஜனநாயக விரோத செயல்பாடுகளை, புதிய பயங்கரவாத தடைச் சட்டத்திலுள்ள ஆபத்துக்களை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக இருக்கின்றன என்று காட்டுவதற்காக இந்த சந்திப்பு என்று நினைத்துக் கொண்டு அங்கு சென்றிருந்த ஊடகப் பிரதானிகள் நிச்சயம் ஏமாற்றமடைந்திருப்பார்கள்.

‘இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தால் சிறு பான்மை மக்களே பாதிக்க ப்படுகின்றார்கள். அதனை நீக்கவேண்டும், புதிய சட்டம் இருப்பதைவிட மோசமானது, அதனை எக்காரணம்கொண்டும் அனுமதிக்க முடியாது’ என்று ஹக்கீம் அங்கு தனது கருத்தை பதிவுசெய்த உடனேயே, அடுத்துப் பேசிய ஒரு தலைவர், அப்படி பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட முடியாது. அதுபற்றி கலந்துபேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று எதிர்க்கட்சிகளிடையே இருக்கும் ‘ஒற்றுமையை’ பதிவுசெய்தார்.

மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு இரண்டு ஆண்டுகள் முன்னதாகவே தேர்தலை நடத்தினார்.

அப்போது ராஜபக்ஷ ஆட்சியை வீழ்த்துவதற்காக எதிர்க்கட்சிகள் எல்லாமே ஓரணியில் திரண்டு- தமக்குள் இருந்த அனைத்து முரண்பாடுகளையும் புறந்தள்ளி மைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக்கி வெற்றியும் பெற்றனர்.

ஆனால், ராஜபக்ஷக்களை வீழ்த்துவது ஒன்றையே தமது குறியாகக் கொண்டிருந்த அந்த எதிரணியினருக்கு தொடர்ந்து ஒற்றுமையாக பயணிக்க முடியவில்லை. அதனாலேயே ராஜபக்ஷக்கள் முன்னரைவிட அதிக பலத்துடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர்.

ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் என்ன நடந்தது என்பது இங்கே மீண்டும் மீண்டும் எழுதித்தான் வாசகர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லையே.

இப்போது, நாட்டை மீட்கக்கூடிய மீட்பராக ரணில் ஆட்சியில் இருந்தாலும் ராஜபக்ஷக்களின் ஆட்சியே தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முழுக்க முழுக்கக் காரணம் என்று பலரும் அவர்மீது குற்றம் சுமத்தி வருகின்றனர். அதிலும் உண்மை இல்லாமல் இல்லை. அவர் தனது கட்சியை வெற்றிகரமாக நடத்துவதில் கவனம் செலுத்துவதைவிட, தனக்கு எதிரான கட்சிகளை பல வீனப்படுத்துவதையே முக்கிய பணியாகக்கருதி செயல்படுபவர் என்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுவதுண்டு.

அந்தக் கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை நேற்றைய எதிர்க்கட்சிகளின் சந்திப்பு உணர்த்தியதையும் ஊடக பிரதானிகள் கண்டுகொண்டிருப்பார்கள்.

**- ஊர்க்குருவி**

# ஜனாதிபதி வீட்டுக்கு தீ வைத்த வழக்கில் ரங்காவுக்கு பிணை!

கொழும்பு, மே 04

கொழும்பில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு தீ வைத்த சம்பவம் தொடர்பான வழக்கில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறீ ரங்காவுக்கு நேற்று பிணை வழங்கப்பட்டது.

சிறீ ரங்காவை ரூ. 20 ஆயிரம் ரொக்கப் பிணையிலும் ரூ. 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையிலும் விடுவித்து பதில் நீதிவான் பண்டார இளங்கசிங்க உத்தரவிட்டார்.

கடந்த ஆண்டு ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்துக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிறீரங்கா தீவிரமாகப் பங்கேற்றிருந்தார். சட்டவிரோதமான கூட்டத்தில் அங்கம் வகித்ததன் பின்னர் சொத்துக்களை சேதப்படுத்துவதற்கு உதவினார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரை சந்தேக நபராகப் பெயரிட்டிருந்தனர்.

சொத்துக்கு தீங்கு விளைவிக்கும் நோக்கத்துடன் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்காகவும் சந்தேகநபர் மீது குற்றஞ்சாட்டப்படலாம் என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

எவ்வாறாயினும், அவர் ஓர் ஊடகவியலாளராக கடமையாற்றிய வேளையில் அவரின் கட்சிக்காரர் குற்றப் புலனாய்வுப் பிரிவினால் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார் என்று பிரதிவாதி சட்டத்தரணி வாதிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக ஜெ. சிறீரங்காவை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு சிறைத் துறை அதிகாரிகளுக்கு நீதிமன்றம் முன்னதாக உத்தரவு பிறப்பித்திருந்தது. கடந்த ஆண்டு ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லத்தை ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று தீயிட்டு கொளுத்தியதுடன், சொத்துகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டது.

2011ஆம் ஆண்டு வவுனியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் சாட்சிகளிடம் செல்வாக்குச் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறீ ரங்கா விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ஐ)

# ரயிலுடன் ஓட்டோ மோதுண்டதில் இருவர் பலி; நால்வர் படுகாயம்!

கொழும்பு, மே 04

புகையிரத கடவையை கடந்த முச்சக்கர வண்டியை ரயில் மோதித் தள்ளியதில் ஏற்பட்ட விபத்தில் குழந்தை உட்பட இருவர் உயிரிழந்தனர். மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

மாத்தறை - வெலிகம - பொலேன பகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், காயமடைந்தவர்கள் மாத்தறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான முச்சக்கரவண்டியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகள், அவர்களின் தாய் மற்றும் இருவர் பயணித்துள்ளனர். இராணுவத்தில் இருந்து விடுமுறையில் வந்திருந்த 32 வயது நபரே முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்றதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த 9 வயது குழந்தை மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தது. மற்றைய இரண்டு பிள்ளைகளான தாய் மற்றும் மற்றுமொருவர் சிகிச்சைக்காக மாத்தறை பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாடசாலை முடிந்து மூன்று குழந்தைகளையும் தாய் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் போது இந்த விபத்து நேர்ந்துள்ளதாக தெரியவந்தது. (ஐ)

# இலங்கையிலிருந்து இளநீரை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை

கொழும்பு, மே. 04

இளநீருக்கு வெளிநாட்டு சந்தையில் மிக அதிக தேவை உருவாகி வருவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு சந்தையில், தேங்காய் நீர் ஒரு ஆற்றல் பானமாக விற்கப்படுகிறது.

மேலும் ஒரு லீற்றர் தேங்காய் தண்ணீர் கொண்ட ஒரு பொதி வெளிநாட்டு சந்தையில் 4-5 அமெரிக்க டொலர்களுக்கு விற்கப்படுகிறது.

இலங்கையில் இளநீரை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கை வெற்றிகரமாக நடந்து வருகிறது. ஆனால் தேங்காய் தண்ணீரை பொதி செய்து விற்பதில் கவனம் செலுத்துவதில்லை.

நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில், உள்நாட்டு நுகர்வு தவிர, பெரும்பாலான தேங்காய்கள் கொப்பரை உற்பத்தித் தொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

அதிக அளவு தேங்காய் தண்ணீர் வீணாகிறது என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனம் கண்டறிந்துள்ளது.

எனவே பயன்படுத்தாமல் தூக்கி எறியப்படும் தேங்காய் நீரை பொதி செய்து அந்நியச் செலாவணியை ஈட்ட வாய்ப்பு உள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் குறிப்பிடுகிறது. (அ)

# லாப்ஸ் எரிவாயு விலை குறையாது

கொழும்பு, மே 04

லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட மாட்டாது என்று அந்த எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிவாயு விலைகள் அதிகரித்த போதிலும், லாப்ஸ் எரிவாயு உற்பத்திகளின் விலையை அதிகரிக்க போவதில்லை என்றும் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் சமையில் எரிவாயு விலை குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

# பொதுமக்களின் யோசனைகளை பெறும் காலம் மே 31 வரை நீடிப்பு

கொழும்பு, மே 04

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கான காலம், மே 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தம் தொடர்பிலான யோசனைகளை, அனுப்புமாறும் பொதுமக்களையும் சிவில் அமைப்புக்களையும் கோருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த யோசனைகள் மற்றும் கருத்துக்களை கவனத்தில் கொண்டு புதிய சட்டமூலத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தவும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu
04.05.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் தன்னை செயலில் நிரூபிக்க வேண்டும்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்பதாக தேசிய இனப்பிரச்னைக்கு தீர்வை காணப்போவதாகப் பேசியிருந்தார். குறிப்பாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருந்தார். 13ஆவது திருத்தச்சட்டத்தை ஓர் இறுதித் தீர்வாக தமிழ்க் கட்சிகள் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்கூட, ரணிலின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தன. இதனடிப்படையில் ரணிலின் அழைப்பில் இடம்பெற்ற சர்வகட்சி மகாநாட்டிலும் பங்குகொண்டிருந்தன. இதனைத் தொடர்ந்து, தனியான சந்திப்புகளிலும் ஈடுபட்டிருந்தன. ஆனால், ரணில் விக்கிரமசிங்க கூறியதுபோல் விடயங்கள் இடம்பெறவில்லை. 13ஆவது திருத்தச்சட்டதை அமுல்படுத்தும் விடயத்திலும் முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிக்கு தமிழ்க் கட்சிகள் ஒத்துழைக்கவில்லையென்று, ரணில் விக்கிரமசிங்க கூறுவது எந்த வகையில் சரியானது? இதற்கு மேல் தமிழ்க் கட்சிகள் எவ்வாறு ஒத்துழைக்க வேண்டுமென்று ரணில் எதிர்பார்க்கின்றார்?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றதை தொடர்ந்து அவ்வப்போது தேசிய இனப்பிரச்னை தொடர்பில் பேசிவருகின்றார் - ஆனால், அவரின் கூற்றை நிரூபிக்கும் வகையில் எந்தவகையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அடுத்த ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க தேர்தலை முன்வைத்து விடயங்களை இழுத்தடிக்க முற்படுகின்றாரா என்னும் கேள்வி எழுகின்றது.

நிலைமைகளை அவதானிக்கும் போது, எமது கேள்வி நியாயமானது - ஏனெனில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் தேவை - குறிப்பாக தென்னிலங்கையின் கடும்போக்கு சிங்கள - பௌத்த தரப்புகளின் செல்வாக்குக்கு உட்பட்ட மக்களின் ஆதரவையும் ஏதோவொரு வகையில் தக்கவைக்க வேண்டியிருக்கின்றது. இந்த நிலையில் அவ்வப்போது சில விடயங்களை கூறிவிட்டு, அது தொடர்பில் சலசலப்புக்களை ஏற்படுத்துவதைத் தாண்டி, செயலின் ஈடுபடும் துணிவை ரணில் காண்பிப்பாரா என்னும் சந்தேகம் வலுத்திருக்கின்றது. இந்த சந்தேகத்தை நியாயப்படுத்தும் வகையிலேயே அவரின் பேச்சுகளும் அமைந்திருக்கின்றன. இந்த பின்புலத்தில் நோக்கினால், ரணில் தொடர்ந்தும் பேசுபவராக இருக்கின்றாரேயன்றி செயலில் எதனையும் நிரூபிப்பவராக இல்லை.

ஆரம்பத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசிய ரணில் விக்கிரமசிங்க - இப்போது புதிய அரசியல் யாப்பின் மூலமான தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசுகின்றார். புதிய அரசியல் யாப்பொன்று இலங்கைத் தீவில் சாத்தியமானதா - அதிலும் தற்போது பொருளாதார நெருக்கடி - அதன் விளைவான அரசியல் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றபோது, புதிய அரசியல் யாப்பு விடயம் சாத்தியமான ஒன்றா?

ஏற்கனவே, முன்னைய ஆட்சியில் புதிய அரசியல் யாப்புக்கு முயற்சித்து அதில் மோசமான தோல்வியை ரணில் சந்தித்திருக்கின்றார். அப்போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளுக்கு முழுமையான ஆதரவு வழங்கியிருந்தது. ஆதரவுக்கு அப்பால் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மைத்திரிக்குமான முரண்பாட்டின்போது, கண்ணை மூடிக்கொண்டு தமிழ் கட்சிகள் ரணிலுக்கே ஆதரவளித்திருந்தன. ரணிலுடன் இணைந்து செயல்பட்டதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலிலும் பின்னடைவுகளை சந்திக்க நேர்ந்தது. ஆனால், ரணிலோ - தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிக்கு தமிழ் கட்சிகள் ஆதரவளிக்கவில்லை என்று கூறுகின்றார். தமிழ் கட்சிகள் இதனை விடவும் எவ்வாறான ஆதரவை வழங்க முடியும்? ஒருவேளை தமிழ் கட்சிகள் அனைத்தையும் விட்டுவிட்டு, ஐக்கிய தேசியக் கட்சியுடன், இணைந்து கொள்ள வேண்டுமென்றா ரணில் எதிர்பார்க்கின்றார்?

# திருமலை மூலோபாய கற்கை நிலையத்தின் ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு



திருகோணமலை, மே 04

திருகோணமலையை தளமாகக் கொண்டு இயங்கிவரும், மூலோபாய கற்கைகளுக்கான நிலையத்தின் (CSST) ஏற்பாட்டில் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு ஜேக்கப் பார்க் விடுதியில் இடம்பெற்றது.

'இலங்கையின் வெளிவிவகார கொள்கையை விளங்கிக்கொள்ளுதல்' என்னும் தலைப்பில் இடம்பெற்ற மேற்படி செயலமர்வில் நிலையத்தின் பணிப்பாளரும் அரசியல் ஆய்வாளருமான யதீந்திரா வளவாளராக கலந்துகொண்டிருந்தார்.

வடக்கு - கிழக்கில் இயங்கிவரும் ஒரேயொரு சிந்தனைக் கூடமான திருகோணமலை மூலோபாய கற்கை நிலையமானது, இலங்கை மற்றும் தெற்காசியாவை மையப்படுத்திய புவிசார் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் ஆய்வு மற்றும் அறிக்கையிடலை பிரதான இலக்காகக் கொண்டு 2018இல், உருவாக்கப்பட்டதாகவும் தற்போது உள்ளூர்மட்டத்தில், பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் ஆகியோருடன் உரையாடும் செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அதன் ஓர் அங்கமாகவே குறித்த ஊடகவியலாளர்களுக்கான செயலமர்வு இடம்பெறுவதாகவும் நிலையத்தின் பணிப்பாளர் ஆ. யதீந்திரா தனது ஆரம்ப உரையில் குறிப்பிட்டிருந்தார். (ஐ)

# மழையுடனான காலநிலை சில நாட்களுக்கு தொடரும்

கொழும்பு, மே 04

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை அடுத்த சில நாட்களுக்கு மேலும், தொடரும் என எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், மேல் மற்றும் தென் மாகாணங்களின் கரையோர பகுதிகளிலும் மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மாவட்டத்திலும் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

இதேவேளை, இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது. (ஐ)

# வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க முடியாது!

## வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, மே 04

எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலை குறைப்புக்கு அமைய பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க முடியாது. ஒரு புறம் விலையை குறைத்து மறுபுறம் மூலப்பொருட்களின் விலையை அதிகரிக்கும் போது விலை குறைப்பது சாத்தியமற்றது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

வெதுப்பக உணவு பொருட்களின் விலை குறைப்பு தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு,

எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலை குறைப்புக்கு அமைய பாண் உள்ளிட்ட வெதுப்பக உணவு பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது. அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்களால் எமது தொழிற்துறை பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

ஒருபுறம் விலையை குறைத்து மறுபுறம் கோதுமை மா,சீனி,முட்டை ஆகியவற்றின் விலை பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் எரிபொருள், எரிவாயு ஆகியவற்றின் விலை குறைப்புக்கு அமைய எவ்வாறு பேக்கரி உணவு பொருட்களின் விலையை குறைக்க முடியும்.

மின்கட்டணம் முறையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதால் எமது தொழில்துறை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்னைகள் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் பலமுறை கலந்துரையாடி கோரிக்கைகளை முன்வைத்தோம். இருப்பினும் எவ்வித பயனும் இதுவரை கிடைக்கவில்லை. மூலப்பொருட்களின் விலை குறைவடைந்தால் பாண் உட்பட ஏனைய உணவு பொருட்களின் விலையை குறைக்கலாம் - என்றார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**



குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனங்களால் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**இடபம்**



பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கை யாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**



சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**



தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறை வேறும். உங்களின் முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**



இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபா ரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய் வீர்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**கன்னி**



ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர் கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்**



எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. போட் டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**விருட்சிகம்**



எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்க பலமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் உங்களைத் தேடி வருவார் கள். அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள்.

**தனுசு**



அனுபவ பூர்வமாக அறிவுப்பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மரியாதை கூடும்.

**மகரம்**



கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் போட் டிகள் குறையும். அதி காரிகள் மதித்துப் பேசு வார்கள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்**



சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டாம். தர்ம சங்கடமான சூழ்நிலைகளில் சிக்குவீர்கள். நலம் பாதிக்கும். உறவினர்களால் பகை உண்டாகும்.

**மீனம்**



உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தாயா ரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் விஜபி கள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோ கத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# அ. தி. மு. கவுக்கு திரும்பி வர பன்னீர்செல்வம் தூதுவிட்டார்!

## பழனிசாமி கருத்தால் கட்சிக்குள் பரபரப்பு

சென்னை, மே 04

அ. தி. மு. கவுக்கு திரும்பி வர ஓ. பன்னீர்செல்வம் தூது விட்டார் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கட்சி நிர்வாகிககள் கூட்டத் திலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். இது தொடர் பில் அவர் மேலும் கூறுகையில்,

ஜெயலலிதா சேவல் சின்னத் தில் போட்டியிடும்போது அவ ருக்கு எதிராக போட்டியிட்ட நபருக்கு உதவியாக இருந்தவர் ஓ. பன்னீர்செல்வம். அவர் 3 முறை முதலமைச்சர் என்று கூறிக்கொள்கிறார்.

மாவட்ட ஆட்சியாளர் விடு முறையில் சென்று விட்டால் மாவட்ட வருவாய் அலுவலர் பொறுப்பு. அதுபோல் பொறுப் பாக இருந்தார். என்னிடம் கட் சிக்கு வந்துவிடுகிறேன் என்று தூது விட்டார். அதற்கு தலைமை கழக நிர்வாகிகள் ஒத்துக்கொள் ளவில்லை.

கட்சிக்கு ஒருங்கிணைப்பாள ராக இருந்து கொண்டு அவரின் மகனை பாராளுமன்ற உறுப்பி னராக வெற்றி பெற செய்தார். மற்ற இடங்களுக்கு சென்று கட்சிப் பணிகளை அவர் ஆற்ற வில்லை. அவர் எந்த நீதிமன் றுக்கு சென்றாலும் வெற்றி பெற முடியாது.

ஓ. பன்னீர்செல்வத்தை தி. மு.க. பகடைக்காயாக வைத்து கொண்டுள்ளது. இதனை கட்சி நிர்வாகிகள் உணர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதனிடையே, எடப்பாடி பழனிசாமியின் இந்தக் கருத்து அ. தி. மு. க. கட்சிக்குள் பரப ரப்பை ஏற்படுத்தியுள்ளது. பன் னீர்செல்வத்தை மீளவும் சேர்க்க ஒரு தரப்பினர் ஆதரவாகக் கருத் துகளை வெளியிட்டு வருகின்ற னர். ஆனால், இன்னொரு சாரார் இதற்கு எதிர்ப்பு தெரிவித் துள்ளனர்.

(ஐ)

# இயக்குநரும் நடிகருமான மனோபாலா காலமானார்!

சென்னை, மே 04

இயக்குநரும் நடிகருமான மனோபாலா (வயது 69) நலக்குறைவால் நேற்று காலை காலமானார்.

கடந்த ஜனவரியில் இதய நோயால் பாதிக்கப் பட்டு வந்த அவர் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்ற வந்தார் என்பது குறிப்பி டத்தக்கது.

இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் என பன்முக தன்மை கொண்டவர் நடிகர் மனோபாலா. தமிழில் கிட்டத்தட்ட 500 திரைப்படங்களுக்கு மேலாக குணச்சித்திரம் மற்றும் நகைச்சுவை வேடங்களில் நடித்துள்ளார்.

மனோபாலா 40 திரைப்ப டங்களையும், 16 தொலைக்காட்சித் தொடர்களையும் 3 தொலைக் காட்சி திரைப்படங்களையும் இயக்கியுள்ளார்.

பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக இருந்த இவர் 1982ஆம் ஆண்டு ஆகாயகங்கை படத்தின் மூலம் தமிழ் திரைத்துறையில் இயக்குநராக அறி



முகம் ஆனார். ரஜினி காந்தை வைத்து ஊர்காவ லன், விஜயகாந்தை நாயகனாகக் கொண்டு சிறைப் பறவை திரைப் படம் வெளிவந்தது. திரைப்படங் களை இயக்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக் கது.

(ஐ)

# மதுபான விற்பனை வருமானத்தில் அரசு நடப்பதாக கூறுவது வேதனை

## அமைச்சர் செந்தில் பாலாஜி

சென்னை, மே 04

மதுபான விற்பனை வருமா னத்தில் தமிழக அரசு நடப்ப தாக கூறுவது வேதனையளிக்கி றது. மது விற்பனை வருமானத் தில் தமிழக அரசு நடக்கவில்லை என அமைச்சர் செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

இதுவரை 96 மதுபான கடை கள் மூடப்பட்டுள்ளன. மேலும் 500 மதுபான கடைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டு வரு கிறது. அரசியல் செய்ய வேண் டும் என்பதற்காக அரசாங்கம் மீது குற்றச்சாட்டுக்களை தேடி தேடி வைக்கின்றனர். மதுபான கடை வருமானத்தில் தமிழக அரசாங்கம் நடப்பதாகக் கூறுவது வேதனையளிக்கிறது. மதுபான விற்பனை வருமானத் தில் தமிழக அரசு நடக்கவில்லை.

சிறப்பு அங்காடிகளில் மது பான விற்பனை நடைமுறை அ. தி. மு. க. ஆட்சியில்தான் கொண் டுவரப்பட்டது - என்றும் கூறி னார்.

(ஐ)

# நான் கூறியவை உண்மைகளே மன்னிப்புக் கேட்கவே முடியாது

## அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, மே 04

'தி.மு.க., - எம்.பி., வீராசாமி தொடர்பாக கூறிய குற்றச்சாட் டுகள் அனைத்தும் உண்மை. எனவே, மன்னிப்பு கேட்க முடி யாது' என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண் ணாமலை சார்பில் வழக்கறிஞர் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை, கடந்த மாதம், 14ஆம் திகதி, தி. மு. க., தலை வர்களின் சொத்து பட்டியலை வெளியிட்டார். அவர்கள் வரு மானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்திருப்பதாக தெரிவித்தார்.

இதற்கு மறுப்பு தெரிவித்து, தி.மு.க., சார்பில் ஆர்.எஸ். பாரதி மற்றும் உதயநிதி, கனி மொழி, டி.ஆர்.பாலு ஆகியோர் சார்பில், அண்ணாமலைக்கு வழக்கறிஞர் அறிவித்தல் அனுப் பப்பட்டது. இதற்கு அண்ணா மலை சார்பில், வழக்கறிஞர் வழியே பதில் அனுப்பப்பட்டது.

அதேபோல், தி.மு.க., - எம். பி., கலாநிதி வீராசாமி சார்பில், வழக்கறிஞர் கடிதம் அனுப்பி இருந்தார். இதற்கே அண்ணா மலை மன்னிப்பு கேட்க முடி யாது என்று பதில் கடிதம் அனுப் பியுள்ளார்.

(ஐ)

# மின்சாரக் கட்டணத்தை 25 வீதம் குறைக்கலாம்!

## சுட்டிக்காட்டுகிறார் ஜானக ரத்நாயக்க

கொழும்பு, மே. 04

**உலக சந்தையில் எரிபொருள் மற்றும் நிலக்கரியின் விலைகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், நாட்டின் மின்சார பாவனைக் கட்டணத்தை சுமார் 25 வீதம் வரை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.**

மின் பாவனைக்கான கட்டணத்தை குறைப்பதற்கு தேவையான சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மற்றும் இந்த ஆண்டு ஜனவரி மாதங்களில் மின் கட்டண உயர்வால் மின் தேவை 20 வீதமாகக் குறைந்துள்ளது.

ஜனவரியில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அனுமானங்களில் ஒன்று, ஒவ்வொரு ஆண்டும் நாடு எதிர்கொள்ள வேண்டிய வறட்சிக் காலங்களில் தேவையைப் பூர்த்தி செய்ய மின்சாரம் தயாரிப்பதாகும். உயர்தரப் பரீட்சை காலத்தில், 8 ஜிகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் நான் 10 ஜிகாவாட்ஸ்




மின்சாரம் கேட்டேன். தற்போது, 13 ஜிகாவாட்ஸ் உற்பத்தி செய்து வருகிறோம். இவை அனைத்தும் அமைச்சால் செய்யப்படுகின்றன. பொது மக்களுக்காக அல்ல. இவ்வாறு செயற்படுவதிலிருந்து அரசியல்வாதிகள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என எனக்குத் தெரியவில்லை.

நாட்டின் நன்மை கருதி மின் உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

அண்மைய மின்சாரக் கட்டணம் 35 வீதம் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அது 65 வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதனால், தேவை குறைந்துள்ளது. எரிபொருளின் விலைகள் மிகவும் முன்னதாகவே குறைக்கப்பட்டிருக்க வேண்டும் - என்றார்.

(அ)

# ஏ.எல். விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்ப கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, மே. 04

2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கான விண்ணப்ப கால அவகாசம் இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளுக்காக, தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து இணையவழி (ஒன்லைன்) விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

கடந்த எப்ரல் 27 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை இதற்காக 6 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது அந்த கால அவகாசம் இன்று வரை நீடிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த காலப்பகுதிக்குள் விண்ணப்பங்களை இணையத்தளம் வழியாக சமர்ப்பிக்க முடியுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரிகள், தமது பிள்ளை அல்லது குடும்ப உறுப்பினர்கள் பரீட்சைக்கு தோற்றியிருப்பின், அவர்கள் தோற்றிய பாடம் அல்லாத ஏனைய பாடங்களுக்கான விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க முடியுமென பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், கடந்த 2022.12. 31 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் விண்ணப்பிக்க முடிமென தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் தகுதி பெற்றவர்கள் https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மேலும் கூறிள்ளார்.

(அ)

# ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் வழங்க மாகாண மட்டத்தில் நிலையங்கள்

கொழும்பு, மே. 04

பெற்றோரால் பராமரிக்க முடியாத 3 மாதங்களுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் நிலையங்களை நிறுவி, அதனூடாக குறித்த குழந்தைகளை பராமரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சட்டங்கள் விரைவில் உருவாக்கப்படும் என நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றமை, கொலை செய்யப்படுகின்றமை மற்றும் கைவிடப்படுகின்றமை ஆகிய சம்பவங்களை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் இதுவரை 80 சிறுவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 60 சிறுவர்கள் கைவிடப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தற்போதைய சட்டத்துக்கு அமைய குழந்தைகளை கைவிட்டுச் செல்லும் பெற்றோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கமுடியும் என திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய திருத்தத்திற்கு அமைய குழந்தைகளை நிலையங்களில் ஒப்படைத்துச் செல்லும் பெற்றோர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்காக தண்டனை சட்டக்கோவையில் கொண்டுவரப்படவுள்ள திருத்தம், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு மற்றும் நீதி அமைச்சின் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

(அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவரை சந்தித்து பேசிய அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, மே. 04

இலங்கைக்கு குறைந்த வட்டியில் சலுகைக் கடன்களை வழங்குமாறு வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் வலியுறுத்தியுள்ளார்.

தென்கொரியாவின் சியோலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவரை அமைச்சர் அலி சப்ரி சந்தித்தார்.

இதன்போது இலங்கை தற்போது உயர்-நடுத்தர வருமானம் கொண்ட நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளதனால் குறைந்த வட்டியில் சலுகைக்க டன்களை வழங்கமுடியும் என்பதை அமைச்சர் சப்ரி சுட்டிக் காட்டினார்.

இதேபோன்ற கோரிக்கையை உலக வங்கியிடம் முன்வைத்ததாகவும், அதை அந்த வங்கி ஏற்றுக்கொண்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# மின்னல் ஏற்படும்போது அவதானமாக இருங்கள்!

## யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு

யாழ்ப்பாணம், மே. 04

மின்னல் ஏற்படும்போது பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு யாழ் மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவி பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்தார்.

தற்போதுள்ள காலநிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த தினங்களாக யாழ். மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக 22 குடும்பங்களைச் சேர்ந்த 79 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் குறிப்பாக சாவகச்சேரி, மருதங்கணி, ஊர்காவற்துறை, கோப்பாய் பிரதேச பிரிவுகளில் பெரும்பாலான பாதிப்புகள் உணரப்பட்டுள்ளன.

இதில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் ஏற்பட்ட மினி சூறாவளி காரணமாக 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 15 வீடுகள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

மேலும் மருதங்கணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணிப் பகுதியில் ஒரு பாடசாலையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்தோடு ஊர்காவற்துறைப் பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தின் காரணமாக ஐந்து குடும்பத்தைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு வீடுகளில் காணப்பட்ட மின் உபகரணங்கள் பாதிப்பு அடைந்துள்ளன.

அத்தோடு கோப்பாய் பிரதேசத்தில் மழையின் காரணமாக ஏற்பட்ட மின்னொழுக்கினால் ஒரு வீட்டில் இருந்த ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காலநிலை ஒரு வார



மாக தொடருமென எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பாக மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பாக இருக்கவேண்டும். குறிப்பாக மின்னல் தாக்கங்கள் ஏற்படும் நேரங்களில் மின் உபகரணங்கள், தொலைபேசிகள் பாவனையை கட்டுப்படுத்துவது மிகவும் சாலச் சிறந்தது-என்றார்.

(அ-03)

# பழங்குடி தலைவரின் மனு விசாரணைக்கு!

கொழும்பு, மே. 04

மகாவலி அதிகார சபையின் ரம்புக்கன் ஓயா பிரதேசத்தில் உள்ள தமது பாரம்பரிய பூர்வீக நிலங்களை பல்வேறு பயிர்ச் செய்கைகளுக்காக தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு எதிராக பழங்குடி இனத் தலைவர் உருவரிகே வன்னில அத்தோ தாக்கல் செய்துள்ள ரிட் மனுவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை செப்ரெம்பர் 8 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ரம்புக்கன்ஓயா பிரதேசத்தில் உள்ள தனது பூர்வீக நிலத்தை சோளம் பயிரிடுவதற்காக தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் மகாவலி அதிகார சபை தீர்மானித்துள்ளதாக மனுவில் பழங்குடியின தலைவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# இலங்கை இன்னும் முழுமையாக இருளிலிருந்து வெளியேறவில்லை

## அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 04

**இலங்கை முழுமையாக இருளில் இருந்து வெளியேற வில்லை என்றாலும், நம்பிக்கை அளிக்கக்கூடிய அறிகுறிகள் காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நம்பிக்கையின் ஒளிக்கீறுகள் காணப்படுகின்றன ஆனால் நாங்கள் இன்னமும் நெருக்கடியிலிருந்து மீளவில்லை.

அமெரிக்க டொலரின் ஸ்திரத்தன்மை, சுற்றுலாப் பயணிகளின் அதிகரிப்பு மற்றும் பணவீக்கம் உள்ளிட்ட பல காரணிகள் இந்தநம்பிக்கைக்கு பங்களிக்கின்றன. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது பணவீக்கம் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

நாட்டில் உணவு காணப்படுகின்றது தட்டுபாடுகளும் நீண்டவரிசைகளும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. சில சிறிய விதிவிலக்குகள் இருந்தபோதிலும், ஐ.எம்.எப். இன் ஒப்புதலுக்கு முன்னர் எடுக்கப்பட வேண்டிய பல தேவையான நடவடிக்கைகள் மற்றும் முன்நிபந்தனைகள் தொடர்பாக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிக்கான அங்கீகாரத்தை பெறுவதற்காக மேற்கொள்ள வேண்டியபல நடவடிக்கைளை நாங்கள் முன்னெடுத்துள்ளோம், மேலும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை அனைவருக்கும் சமமானதாக காணப்படவேண்டும்.

2030 ஆம் ஆண்டளவில் நாட்டிற்குள் நிலையான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கை ஒரு தீவாக இருப்பதால் காற்றாலை மற்றும் சூரிய சக்தி ஆகிய இரண்டுக்கும் சிறந்த இடங்கள் காணப்படுகின்றன.

மேலும் இலங்கையை இராணுவ மையமாகவோ அல்லது துறைமுகமாகவோ பயன்படுத்த எவருக்கும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். இதுவே எமது தெளிவான முடிவு. சீனாவின் சமீபத்திய முதலீடு முற்றிலும் வணிக ரீதியிலானது-என்றார்.

# இலங்கையில் 23,200 ரூபாவுக்கு விற்பனையான முதலை பணிஸ்!



கொழும்பு, மே. 04

முதலை வடிவில் தயாரிக்கப்பட்ட பணிஸ் ஒன்று 23,200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சம்பவமொன்று குருநாகல் பகுதியில் பதிவாகியுள்ளது.

அனுராதபுரம், கலென்பிந்துனுவெவ, படிகார மடுவ பிரதேசத்திலுள்ள மகளிர் சங்கமொன்றுக்கு நிதி திரட்டுவதற்காக நடத்தப்பட்ட கண்காட்சி, ஒன்றில் குறித்த முதலை பணிஸ் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அங்கு ஏலம் விடப்பட்ட முதலை பணிஸ், 2 அடி 2 அங்குலம் நீளம் கொண்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

குருநாகல் கொலனியா விகாரையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அப்பகுதியில் உள்ள ஒரு கிராமத்தின் இளைஞர்கள் குழுவொன்று அந்த பணிஸை வாங்கியுள்ளது. (அ)

# போலி கலாநிதி, பேராசிரியர் பட்டங்களுக்கு எதிரான சட்டங்களை உருவாக்குமாறு கோப் குழு கோரிக்கை!

கொழும்பு, மே. 04

கலாநிதி மற்றும் பேராசிரியர்கள் போன்ற பட்டங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தேவையான சட்ட மாற்றங்களை முன்வைக்க வேண்டும் என அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்ற ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட நபர்கள் கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் பல்கலைக்கழக முறைமை மற்றும் உயர்கல்வி தொடர்பான பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் கோப் குழுவுக்கு அண்மையில் அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்போது, கலாநிதி பட்டம் மற்றும் பேராசிரியர் பட்டங்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவுக்கு சட்ட ஏற்பாடுகள் இல்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்கள் குறைமதிப்பிற்கு உட்படுத்தப்படுவதால், இந்த விவகாரத்தில் ஆணைக்குழு தலையிட வேண்டும் என்று வலியுறுத்திய கோப் குழு, அத்தகைய பட்டங்களை முறையற்றவாறு பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான சட்ட மாற்றங்களை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

(அ)

# இரு மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு

## பாடசாலை அதிபர் கைது

கொழும்பு, மே. 04

இரண்டு மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்த குற்றச்சாட்டில் கம்பளை கல்வி வலயத்துக்குட்பட்ட பிரதான தமிழ் பாடசாலை ஒன்றின் அதிபரை புபுரஸ்ஸ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் 14 மற்றும் 15 வயதுடைய மாணவிகளுக்கு அதிபர் பாலியல் தொந்தரவு அளித்துள்ளதாக, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் புபுரஸ்ஸ பொலிஸ்நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

51 வயதுடைய குறித்த அதிபர் கலஹா பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை முடிந்து மாணவர்களுடன் பஸ்ஸில் கலஹா பகுதிக்கு செல்லும்போது, குறித்த மாணவிகளின் அருகில் அமர்ந்திருந்திருந்த குறித்த அதிபர் தனது பையினால் மூடிக் கொண்டு அவர்களின் உடலை ஸ்பரிசம் செய்ததாக முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன.

மாணவிகளின் வாக்குமூலங்கள் மற்றும் அதை நேரில் பார்த்த மாணவர்களின் சாட்சியங்களின் அடிப்படையில் முறைப்பாடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவங்கள் குறித்து பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள் வலய கல்வி அலுவலகத்தில் இதற்கு முன்னர் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் அதிபரை இடமாற்றம் செய்து அந்த அலுவலகத்தினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிபரின் மனைவியும் ஒரு ஆசிரியை என்றும் அவர் கலஹா பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் பணிபுரிவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அதிபர் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார். (அ)

# 25வீதமானோர் விற்றமின் டி குறைபாட்டினால் பாதிப்பு!

கொழும்பு, மே. 04

நாட்டிலுள்ள மக்கள் தொகையில் 25 வீதமானோர் விட்டமின் டி குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு பிரிவின் வைத்திய நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குழந்தைகள், பெரியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களைக் கொண்டு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது சற்று ஆபத்தான சூழ்நிலையாக உருவாகக்கூடும்.

விட்டமின் டி குறைபாட்டைக் குறைக்க முடிந்தவரை சூரிய ஒளியில் இருப்பது முக்கியமானது. ஆனால், நாட்டில் தற்போது சூரிய ஒளியின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. எனவே, விட்டமின் டி யை பெற்றுக்கொள்வதற்காக மக்கள் நீண்ட நேரம் சூரிய ஒளியில் இருக்கக்கூடாது.

குழந்தைகள், முதியவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களின் விட்டமின் குறைபாடு குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். சில மாதங்களுக்கு ஒருமுறை விட்டமின் குறைபாடு குறித்து வைத்திய அணுகி ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# 1941 பாடசாலைகளில் விஞ்ஞானத்துறை கற்பித்தல் முற்றாக இடம்பெறுவதில்லை

கொழும்பு, மே. 04

நாட்டில் உயர்தரத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 952 பாடசாலைகள் உள்ள நிலையில், ஆயிரத்து 11 பாடசாலைகளில் மாத்திரமே விஞ்ஞானத்துறையில் கற்க முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற கோப் குழுவின் கூட்டத்தில் இந்த விடயம் இந்த விடயத்தை தெரியப்படுத்திய அவர், ஆயிரத்து 941 பாடசாலைகளில் விஞ்ஞானத் துறையில் கற்பித்தல் இடம்பெறுவதில்லை என்று குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக பிரவேசத்தின்போது ஒரு சில பாடங்களுக்கு நடைமுறைப் பரீட்சைகளை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்திய குழு, இதன் மூலம் அதிக இசற் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியது.

அந்தப் பாடங்களுக்கு உயர்தரப் பரீட்சையின் போதும் நடைமுறைப் பரீட்சை நடத்தப்பட்டு ஞு புள்ளிகள் வழங்கப்படுவதால் மேலும் நடைமுறைப் பரீட்சை அவசியமில்லை என வலியுறுத்தப்பட்டது.

அதற்கமைய, இது தொடர்பில் உடனடியாக முடிவெடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு கோப் குழு பரிந்துரைத்தது.

அதேநேரம், கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க தேவையான சட்ட மாற்றங்களை முன்வைக்க வேண்டும் என அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவான கோப் குழு, பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு அறிவித்துள்ளது.

பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட நபர்கள் கலாநிதி மற்றும் பேராசிரியர் பட்டங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளதாக கோப் குழு தெரிவித்துள்ளது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் முன்னையதைவிட ஆபத்தானது

## மக்களின் குரல்களே சாட்சி என்கிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, மே 04

**இலங்கை முழுவதும் அதிகரித்து வரும் போராட்டங்களுக்கு பதிலளிக்கும் வகையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றுச் சட்டத்தை முன்மொழியவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.**

இந்தச் சட்டமூலமானது மறுவடிவம் பெறும் முந்தைய கொடூரமான சட்டத்தை விடவும் ஆபத்தானது என்பதற்கு இலங்கை மக்களின் கூச்சல் சான்றளிக்கிறது என்று அதன் ஆசியாவுக்கான சட்டப் பணிப்பாளர் கரோலின் நேஷ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்-

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால் அமைதியான முறையில் போராடுவதற்கான, மனித உரிமைகளைப் பயன்படுத்தும் மக்களுக்கு எதிராக, பயங்கரவாத குற்றச்சாட்டுகளை விதிக்க இந்த சட்டம் பயன்படுத்தப்படலாம்.

இந்தச் சட்டமூலமானது மறுவடிவம் பெறும் முந்தைய கொடூரமான சட்டத்தை விடவும் ஆபத்தானது என்பதற்கு இலங்கை மக்களின் கூச்சல் சான்றளிக்கிறது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டால், இலங்கை அதிகாரிகள் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதைப் போன்று, கருத்து உரிமைகளை அடக்குவதற்கு இன்னும் அதிகாரம் பெறுவார்கள்.

இந்த புதிய சட்டத்தை கணிசமான அளவில் திருத்த வேண்டும் அல்லது முழுமையாக கைவிடவேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும். இடைக்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடியாக தடை விதிக்க வேண்டும். இந்த சட்டங்களை அமுல்படுத்துவது மனித உரிமைகளை அவமதிக்கும் செயலாகும்.

அத்துடன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முதல் மாணவர் குழுக்கள் வரை, நாடு முழுவதிலும் உள்ள இலங்கையர்கள் எவரையும் பயங்கரவாதி என்று பெயரிடுவதற்கும், அரச அதிகாரத்திற்கு சவால் விடுக்கும் எவரையும் குறிவைப்பதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிப்பதாக இலங்கையர்கள் அச்சப்படுகின்றனர்.

அமைதியான எதிர்ப்பாளர்களை நசுக்குவதற்கும் பேச்சுரிமையைக் குறைப்பதற்குமான இந்த முயற்சிக்கு எதிராக பல குழுக்கள் ஒன்றிணைந்துள்ளன.

எனவே, குறித்த உத்தேச சட்டத்தில் உடனடியாக கணிசமான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் -என்றார். (அ)

# வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க அரசு விசேட சலுகை

கொழும்பு, மே. 04

எதிர்வரும் காலங்களில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் விசேட திட்டத்தை அறிமுகப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதற்கமைவாக, அரச நிதி மற்றும் வெளிநாட்டு முதலீட்டுக்கான ஏற்பாடுகள் அடங்கிய சலுகை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு போதிய ஊக்குவிப்பு கிடைக்காமை பாரிய பிரச்னையாக உள்ளது என அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பல இயற்கை வளங்கள் காணப்படுகின்ற போதிலும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது உரிய முறையில் மேற்கொள்ளப்படுவது தொடர்பில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டுமென குறிப்பிட்டார். (அ)

# தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிரான மனு பரிசீலனைக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே. 04

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனு உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி,குறித்த அடிப்படை உரிமைகள் மனு எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதியன்று உயர்நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாதமையால், தங்களதும், நாட்டு மக்களதும் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரினி அமரசூரிய மற்றும் சுனில் ஹந்துன்நெத்தி ஆகியோர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி மேடையில் பேசியதால் கறுப்புப் பட்டியலில்!

## எயார் வைஸ் மார்ஷல் மனு

கொழும்பு, மே. 04

தம்மை கறுப்புப் பட்டியலில் சேர்க்க இலங்கை விமானப்படைத் தளபதி எடுத்த தீர்மானத்தை ரத்து செய்ய உத்தரவிடுமாறு கோரி, ஓய்வுபெற்ற எயார் வைஸ் மார்ஷல் சம்பத் சஞ்சீவ துய்யகொந்த, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் மேடையில் கருத்து தெரிவித்ததன் விளைவாகவே இந்த கறுப்புப் பட்டியல் தனது பெயர் இடம்பெற்றதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் தெரிவித்ததாக மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது நடவடிக்கையின் மூலம் இலங்கை விமானப் படையின் கௌரவம் ஒருபோதும் மீறப்படவில்லை என்றும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இதன்படி, மனுவில் பிரதிவாதிகளாக இலங்கை விமானப் படைத் தளபதி, அதன் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக் கோன் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள் ளனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு தேசிய கிறிஸ்தவ பேரவை எதிர்ப்பு

கொழும்பு, மே. 04

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு இலங்கையின் தேசிய கிறிஸ்தவ பேரவை தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் ரத்து செய்யப்படும் என்றும், நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் கடமைகளை மீறாத புதிய சட்டம் உருவாக்கப்படும் என்றும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இலங்கை மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வாக்குறுதி அளித்தன.

எனினும், முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், இந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டது.

எனவே இந்த விடயத்தில் பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறலை தேசிய கிறிஸ்தவ சபை கோருகின்றது.

ஏடிஏ என்ற புதிய சட்டமூலம், எதிர்ப்புக்கள், தொழிற்சங்க நடவடிக்கை, பயங்கரவாதச் செயல்கள் உள்ளிட்ட கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் தொடர்பில், தெளிவற்ற வரையறைகளைக் கொண்டுள்ளது.

இந்த வரையறை எதிர்ப்பாளர்களை 'பயங்கரவாதிகளாக' ஆக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் இலங்கையின் தேசிய கிறிஸ்தவப் பேரவை குறிப்பிட்டுள்ளது. (அ)

# இரத்த பரிசோதனைக்காக அதிக கட்டணம் அறவிட்ட 12 மருத்துவமனைகளுக்கு ரூ.9.4 மில்லியன் அபராதம்!

கொழும்பு, மே. 04

டெங்கு மற்றும் முழு இரத்த எண்ணிக்கை பரிசோதனைகளுக்கு வர்த்தமானி கட்டணத்தை விட அதிகமாக வசூலித்ததற்காக பன்னிரண்டு தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்களுக்கு நீதிமன்றங்கள் 9.4 மில்லியன் ரூபா அபராதம் விதித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட விசாரணை அதிகாரி ஏ.யு.ரஞ்சன தெரிவித்தார்.

கொழும்பு, நுகேகொட, மாளிகாகந்த மற்றும் கல்கிஸை நீதிமன்றங்களினால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட விசேட சுற்றிவளைப்புப் பிரிவினரால் கடந்த நான்கு மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது அதிகளவு பணம் அறவிடப்பட்டமை தொடர்பில் தெரியவந்த தகவலின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (அ)

# நிதி ஆணைக்குழுவுக்கு 3 புதிய உறுப்பினர்கள்

கொழும்பு, மே. 04

நிதி ஆணைக்குழுவிற்கு (கோபா) மூன்று புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் தலைவராக சுமித் அபேசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் எனவும், துவான் நலின் ஒஸ்மன் மற்றும் மாயன் வாமதேவன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# பூநகரியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம்; அனுமதி வழங்க மாவட்ட அபிவிருத்திக்குழு மறுப்பு

கிளிநொச்சி, மே. 04

பூநகரி கௌதாரிமுனையில் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின்னுற்பத்திக்கு மாவட்ட அபிவிருத்திக் குழு அனுமதி வழங்க மறுப்பு தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இதற்கான அனுமதி கோரப்பட்டது. அதன் முழுமையான சாதக பாதக நிலை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதுபற்றி தீர்மானிக்க முடிவு எடுக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பில் தாம் இதுவரை அறியவில்லை எனவும், இன்றே அறிய முடிந்ததாகவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எஸ்.சிறிதரன், எஸ்.கஜேந்திரன், இது தொடர்பில் ஆராய்ந்தே அனுமதி வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

மன்னார், புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் அதானி குடும்பத்தின் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டதாகவும், மன்னாரில் மக்கள் எதிர்ப்பு எழுந்துள்ளதாகவும் தெரிவித்த அவர்கள், இது தொடர்பில் ஆராய்ந்தே வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், இவ்விடயம் தொடர்பில் விவரங்களை பெற்று தனியாக கூடி ஆராய்ந்த பின்பே அனுமதி வழங்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது, அதானி நிறுவன ஊழியர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சூடானிலிருந்து ஆயிரக்கணக்கானோர் ஒரே நேரத்தில் தப்பிச்செல்ல குவிவதால் தத்தளிக்கும் துறைமுக நகரம்!

லிஸ் டோவ்சே

சூடான் நாட்டு துறைமுகத்துக்கு அந்த மயான இரவில் சவுதி அரேபியாவின் எச்எம்எஸ் அல் திராயா கப்பல் வந்து மீட்புப் பணிகளை உடனடியாக தொடங்கிய பின், அந்த இடம் அங்கிருந்து தப்பிச் செல்ல விரும்பிய பொதுமக்களை மீட்கும் ஒரு மிக முக்கிய தலமாகவும், மனிதநேய மையமாகவும் மாறியது. நள்ளிரவு 2 மணிக்கு போர்ட் சூடான் நகருக்கு வெளியில் மேலும் இரண்டு கப்பல்கள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டன. இந்த கப்பல்கள் தங்களது மீட்புப் பணிகளைத் தொடங்கத் தயாராக இருந்தன.

இந்த மீட்பு நடவடிக்கையின் மூலம் மிகுந்த நிம்மதியடைந்ததாகவும், ஆனால் சூடான் நாட்டில் நடக்கும் கொடூரங்களைக் கண்டு மிகுந்த சோகமடைந்ததாகவும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஹசான் பராஸ் என்பவர் தெரிவித்தார்.

போர்க்களமாகக் காட்சியளிக்கும் சூடான் நாட்டுக்குள் சென்று பார்க்கும் அனுமதி ஒரு சில வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு மட்டும் கிடைத்தது. சவுதி அரேபியா துறைமுக நகரமான ஜெட்டாவிலிருந்து அல் திராயா கப்பலில் பத்து மணிநேர பயணத்துக்குப் பின் ஒரு இழுவைப் படகு மூலம் இந்த கரைப்பகுதியை அடைந்தோம்.

அங்கே பாஸ்போர்ட்டுகளுடன் நீண்ட வரிசையில் இளம் பணியாளர்கள் நின்றிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் தெற்கு ஆசியாவைச் சேர்ந்தவர்கள். இரண்டு வார காலம் தாக்குதல் கொடுமைகளைக் கடந்து அந்த துறைமுகத்துக்கு வந்து மூன்று நாட்களாக காத்துக்கொண்டிருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். இது போன்ற மோசமான நிலையை மக்கள் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது என சூடானிலிருந்து தப்பிச் செல்லத் தயாராகிக்கொண்டிருந்த பாகிஸ்தான் நாட்டின் ஹசான் பராஸ் கூறினார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த மற்றொரு நபர், தான் பவுண்டரி ஒன்றில் வேலை பார்த்ததாகவும், ஏராளமான குண்டுவெடிப்புகள் மற்றும் துப்பாக்கி தாக்குதல்களைக் கடந்து வந்து, ஏதாவது உதவி கிடைக்குமா என கடலையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ராணுவ ஜெனரல் ஜென் அப்தல் பட்டா அல்- புர்ஹான் மற்றும் ஆர்.எஸ்.எஃப். எனப்படும் துணை ராணுவப் படையின் ஜெனரல் ஹெமெத்தி ஆகியோருக்கு இடையே நிலவும் மோதலின் வெளிப்பாடாகவே சூடானில் கடந்த சில வாரங்களாக இது போன்ற தாக்குதல்கள் நடந்துவருகின்றன.

இந்த தாக்குதலின் போது போர்ட் சூடான், தலைநகர் கார்ட்டூம் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து தப்பிச் செல்ல முயலும் பொதுமக்களுக்கு இந்த துறைமுக நகரம் மிகவும் நிம்மதியளிக்கும் இடமாக மாறியுள்ளது என என்னுடன் பணியாற்றும் மற்றொரு சூடான் நாட்டுப் பணியாளரான முகனது ஹாஷிம் தெரிவிக்கிறார்.

சூடான் தாக்குதல் காரணமாக தப்பி வந்த பொதுமக்கள் அப்போது மோசமான தெருக்களில் தூங்கிக்கொண்டிருந்தனர். உள்ளூரில் இருக்கும் விடுதிகள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களால் நிரம்பி வழிந்தன. தாக்குதல் ஆபத்திலிருந்து ஒவ்வொரு நாடும் தங்களது குடிமக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை அவசர அலுவலகங்களைத் திறந்து அதிவிரைவாக மேற்கொண்டு வந்தன.

போர்ட் சூடான் நகரில் யேமன், சிரியா மற்றும் அங்கிருந்து தப்பிச் செல்ல விரும்பிய சூடான் நாட்டு மக்கள் அதிக எண்ணிக்கையில் பதற்றத்துடன் குழுமியிருந்தனர்.

மேலும், இந்நகரில் யேமன் நாட்டைச் சேர்ந்த சுமார் 3,000 மாணவர்கள் வாரக்கணக்கில் சிக்கித் தவித்துவந்தனர். சவுதி அரேபிய அரசு யேமன் நாட்டவர்களை மீட்பதில் அக்கறை காட்டினாலும், பெரும் எண்ணிக்கையிலான மக்களை மீட்க அந்நாட்டு அரசு தயக்கம் காட்டுகிறது என அவர்களுக்கு உதவும் பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சவுதி அரேபியாவுக்கு வரும் பெரும்பாலான மக்கள் அங்கே சிறிது நாட்கள் விடுதிகளில் தங்கியிருக்க அந்நாட்டு அதிகாரிகள் உதவுகின்றனர். ஆனால், அந்த மக்களின் சொந்த நாட்டு அரசுகள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக அவர்களுக்கான விடுதிக் கட்டணங்களை செலுத்திவிட்டு, அவர்களை அந்தந்த நாடுகளுக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.



ஜெட்டாவிலிருந்து கிளம்பிய போது, என்னுடன் பணியாற்றிய முகமது ஹஷீமின் நெருங்கிய உறவினர் ஒருவர் அவரது இரண்டு குழந்தைகளுடன் செங்கடலில் 18 மணிநேரப் பயணத்தில் சவுதி அரேபியாவுக்கு தப்பிச் சென்றதைப் பார்த்தபின், போர்ட் சூடானில் தமது உறவினர்கள் யாராவது இருக்கின்றனரா என சல்லடை போட்டு அவர் தேடிவிட்டார்.



வெளிநாட்டு பாஸ்போர்ட்டுகளை வைத்திருக்கும் சூடான் நாட்டு மக்கள் அங்கிருந்து தப்பிச் செல்வது சோகத்திலும் ஒரு நிம்மதியான அனுபவமாகவே இருந்தது.

கார்ட்டூமில் உள்ள ஸ்போர்ட் சிட்டியில் ஏப்ரல் 15-ம் தேதி தாக்குதல் தொடங்கிய நிலையில், அங்கே வசித்து வந்த ரஷா என்ற பெண், தூங்கும் குழந்தையை தோளில் சுமந்தபடியே எங்கள் குடும்பம் சூடானில் இருந்து வெளியேற உதவுங்கள் எனக் கதறினார். சூடானைக் காப்பற்ற உலக நாடுகளிடம் பேசும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

**சூடான் நாட்டின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள போர்ட் சூடான் என்ற துறைமுக நகரம், அந்நாட்டிலிருந்து தப்பிச் செல்ல முயலும் பொதுமக்களின் முக்கிய வழித்தடமாக மாறியுள்ளது. அங்கிருந்து சவூதி அரேபியாவின் ஜெட்டாவுக்கு பொதுமக்களை அழைத்துச் செல்லும் மீட்புக் குழு**

அழகாக அமெரிக்க ஆங்கிலம் பேசும் அவரது எட்டு வயது மகள் லீன், அவர்களது வீட்டிற்குள் ஆயுதமேந்திய தாக்குதல்தாரிகள் புகுந்த போது ஏற்பட்ட அனுபவத்தை அச்சத்துடன் விவரித்தார். தாக்குதல்தாரிகள் உட்புகுந்த போது, அந்த வீட்டில் இருந்த பத்து பேரும் மறைவான இடங்களில் பதுங்கிக் கொண்டதாகவும், அழுதால் சத்தம் கேட்டு விடும் என்பதற்காக அழுகையை அடக்கிக் கொண்டு ஒளிந்திருந்ததாகவும் அந்தக் குழந்தை தெரிவித்தது.

அவர்கள் மிகவும் மோசமானவர்கள் என லீனின் இளைய சகோதரன் சொன்னதைக் கேட்டபோது என்ன சொல்வது என்றே தெரியவில்லை. வீட்டிற்குள் புகுந்த தாக்குதல்தாரிகள் அனைவரும் ஆர்.எஸ்.எஃப். படையைச் சேர்ந்தவர்கள் என லீனின் தந்தை விளக்கினார். அவர்கள் அனைவரும் வன்முறை மற்றும் கொள்ளையில் ஈடுபட்டதாக பெரும்பாலானோர் புகார் தெரிவித்தனர்.

சூடான் நாட்டில் சக்தி வாய்ந்த இருநபர்களுக்கு இடையே நடக்கும் இப்போர் மிகவும் மோசமடைந்து வரும் நிலையில், அவர்களுக்குள் நிலவிய தனிப்பட்ட மற்றும் அரசியல் விரோதம் தான் காரணம் என்பதை விட அவர்களது ஆதிக்க அதிகாரங்களுக்கு இடையே நிலவும் போட்டிதான் காரணம் என்பதே சரியாக இருக்கும்.

யேமன் ஹௌதிகளுடன் போரிட, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு ஆதரவாக தமது படைகளை அனுப்பிய துணை ராணுவப் படையின் ஜெனரல் ஹெமெத்திக்கு இந்நாடுகள் தாராளமாக நிதி அளித்ததால் அவர் பொருளாதார வளம் மிக்க ஜெனரலாக இருக்கிறார்.

ஆனால், அண்மைக்காலமாக சூடான் ராணுவ ஜெனரல் புர்ஹானுக்கும் நெருக்கம் மிகுந்த நாடாக சவுதி அரேபியா விளங்கி வருகிறது. கனிம வளம் மற்றும் விவசாய வளங்களை அதிகமாகக் கொண்ட சூடான் நாட்டின் மீது எகிப்து, இஸ்ரேல், ரஷ்யா மட்டுமல்லாமல், ரஷ்யாவின் ஆதரவு பெற்ற தனியார் ராணுவமும் ஒரு கண் வைத்துள்ளது என்றே சொல்லலாம்.

ஆனால் தற்போதைய ஒரு மோசமான சூழலில், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் தான் இந்த கொடூரமான தாக்குதலை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றன.

மீட்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சவுதி அரேபியாவுக்கு பல நாட்டு தூதர்கள் மனமாற நன்றி தெரிவித்து வருகின்றனர். இதுவரை 100 நாடுகளைச் சேர்ந்த 5,000 பேர் செங்கடல் வழியாக சவுதி அரேபிய போர்க் கப்பல்கள் மற்றும் அல்லது அந்நாட்டு ராணுவம் அனுப்பிய தனியார் கப்பல்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதில் சனிக்கிழமையன்று மிக அதிகமாக ஒரே நாளில் ஈரானியர்கள் உள்பட 2,000 பேர் சவுதி அரேபியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பரம்பரை விரோதிகளாக விளங்கிய சவுதி அரேபியாவும், ஈரானும் அண்மையில் தங்கள் பகையை மறந்து, தூதரக உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளும் முயற்சியைத் தொடங்கியுள்ளது இங்கே கவனிக்கத்தக்கது.

சூடானில் பல ஆண்டுகள் பொறியாளராகப் பணியாற்றிய கணவருடன் ஜெட்டா வந்த நஸ்லி என்ற ஈரானிய சிவில் எஞ்சினியர், சவுதி அரேபியாவும், ஈரானும் உறவுகளைப் பலப்படுத்தினால் அது தங்களுக்கு ஒரு வரமாகவே அமையும் என்றார்.

இந்நிலையில், தாக்குதலில் இருந்து தப்பி வந்த மேலும் பலர், ஞாயிறன்று சவுதி போர்க்கப்பலை எதிர்பார்த்து இழுவைப் படகு மூலம் பயணத்தைத் தொடங்கினர். அவர்கள், சூடான் நாட்டை நினைத்து வருந்தியதுடன், வாழ்க்கையில் மீண்டும் ஒரு முறை அந்த நாட்டின் பக்கமே தலைவைத்தும் படுக்கக்கூடாது என்ற தீர்க்கமான எண்ணத்தில் அங்கிருந்து வெளியேறும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (பிபிசி)





# கடையடைப்பு தேவையா?

**நிலாந்தன்**



கடந்த வெள்ளிக்கிழமை, வெடுக்குநாறி மலையில் பூசைகள் நடக்கத் தொடங்கியுள்ளன. வியாழக்கிழமை கச்சத்தீவிலிருந்து புத்தர் சிலை அகற்றப்பட்டுள்ளது. கடந்த 25ம் திகதி நடந்த கடையடைப்பு, அதற்கு அழைப்பு விடுத்த கட்சிகளைப் பொறுத்தவரை வெற்றிதான். எனினும், கடந்த வியாழக்கிழமை, யாழ்ப்பாணம், தையிட்டியில் தனியார் காணியில் ராணுவம் கட்டிய பெரிய விகாரையில் பூசை நடந்திருக்கிறது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

கடந்த வாரம் நடந்த ஒரு நாள் கடையடைப்பு தொடர்பாக மூன்று விதமான விமர்சனங்கள் உண்டு. முதலாவது அதனால் எந்தப் பயனும் இல்லை, அது கொழும்புக்கு நோகாத ஒரு போராட்டம் என்பது. இரண்டாவது அது அன்றாடங் காய்ச்சிகளின் வயிற்றிலடிப்பது என்பது. மூன்றாவது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறும் விமர்சனங்கள். இவை மூன்றையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவதாக இது போன்ற போராட்டங்களால் பயன் இல்லை என்பது. இந்த ஒரு நாள் போராட்டம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்பது உண்மை. தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய போராட்டத்தை நடாத்திய மக்கள். இதுபோன்ற ஒருநாள் கடையடைப்புக்கள் கொழும்பின் கவனத்தையோ உலகத்தின் கவனத்தையோ தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருக்கப் போதுமானவை அல்ல. எனினும், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டதுக்கு எதிராகவும் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் தமிழ்மக்கள் போராட வேண்டியிருக்கிறது. வடக்கு கிழக்கு இணைந்து ஒப்பீட்டளவில் ஒரு பெரிய திரளாக தமிழ் மக்கள் தமது எதிர்பைக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றையும் செய்யாமலிருந்து வெறுவாய் சப்புவதைவிட இது பரவாயில்லை.

அதேசமயம், கடந்த ஆண்டு தென்னிலங்கையில் தோன்றிய தன்னெழுச்சிப் போராட்டங்களோடு ஒப்பிடுகையில் இதுபோன்ற கடையடைப்புகள் படைப்புத்திறன் குறைந்தவை, யாந்திரீகமானவை. இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கையிடமிருந்து எதையுமே கற்றுக்கொள்ளவில்லை. சமூக வலைத்தளங்களில் சிலர் விமர்சிப்பதைப் போன்று இது அரசியல்வாதிகளின் இயலாமையைக் காட்டுகிறது. ஒரு புதிய மக்கள் போராட்ட வடிவத்தைக் குறித்துச் சரியான விளக்கமோ, விசுவாசமான தேடலோ, தீர்க்கதரிசனம் மிக்க வழிவரைபடங்களோ இல்லாத வெற்றிடத்தில்தான் இது போன்ற யாந்திரீகமான போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே கடையடைப்பு ஒரு விதத்தில் தமிழ் அரசியலின் இயலாமையை காட்டுகிறது என்றும் சொல்லலாம்.

இரண்டாவது இப்போராட்டத்தால் அன்றாடங் காய்ச்சிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பது. அது உண்மை. அரசியல்வாதிகள் அனேகமாக அன்றாடங் காய்ச்சிகள் இல்லை. அன்றன்று உழைப்பவர்கள் இதுபோன்ற போராட்டங்களால் பாதிக்கப்படுவார்கள். ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தன் அரசியல் இலக்குகளை அடைவதற்காகச் செய்யக்கூடிய தியாகங்களுக்குள் அந்த ஒரு நாள் உழைப்பும் அடங்கும். தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய தியாகங்களைச் செய்த மக்கள். ஒரு நாள் உழைப்பைக் காட்டி இதுபோன்ற போராட்டங்களை கொச்சைப்படுத்த முடியாது.

மூன்றாவது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வைக்கும் விமர்சனங்கள். அவை வழமையான வாய்ப்பாட்டு விமர்சனங்கள்தான். போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகளுக்கும் அதற்குத் தகுதி இல்லை, அவர்கள் விசுவாசமாகப் போராடவில்லை என்ற பொருள்பட முன்னணி குற்றம் சாட்டியிருக்கிறது.

சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகவும் உத்தேச பயங்கரவாத ஏதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் தமிழ் மக்கள் போராட வேண்டும். அது அரசுக்கு எதிரான போராட்டம். அப்போராட்டத்தை எதிர்ப்பது அதன் தர்க்கபூர்வ விளைவாக யாருக்குச் சேவகஞ் செய்யும்?.

அந்த ஏழு கட்சிகளுக்கும் போராடும் தகமை இல்லையென்றால் அல்லது அவை விசுவாசமாகப் போராடவில்லையென்றால், விசுவாசமான ஒரு போராட்டத்தை துணிச்சலான ஒரு போராட்டத்தை ஏன் முன்னணி ஒழுங்கு செய்யக்கூடாது ?

முன்னணி தன்னை ஏனைய கட்சிகளைவிடத் தூய கட்சியாகவும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு அதிகம் விசுவாசமான கட்சியாகவும் காட்டிக் கொள்கிறது. அதைவிட முக்கியமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசாகவும் அது தன்னைக் காட்டிக்கொள்கிறது. அந்த அடிப்படையில் அந்த இயக்கத்தின் நினைவு நாட்களைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்று திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அன்னை பூபதியின் நினைவு மண்டபத்திலும் முன்னணிக்கும் கிழக்கைச் சேர்ந்த சிவில் அமைப்புகளுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

**இப்போராட்டத்தால் அன்றாடங் காய்ச்சிகள் பாதிக்கப்பட்டார்கள் என்பது. அது உண்மை. ஆனால் ஒரு மக்கள் கூட்டம் தன் அரசியல் இலக்குகளை அடைவதற்காகச் செய்யக்கூடிய தியாகங்களுக்குள் அந்த ஒரு நாள் உழைப்பும் அடங்கும். தமிழ் மக்கள் இதைவிடப் பெரிய தியாகங்களைச் செய்த மக்கள். ஒரு நாள் உழைப்பைக் காட்டி இதுபோன்ற போராட்டங்களை கொச்சைப்படுத்த முடியாது.**

அது ஓர் அருவருப்பான முரண்பாடு. அன்னை பூபதியை நினைவு கூர்வதற்கென்று ஒரு பொதுக் கட்டமைப்பு அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் குடிமக்கள் சமூகத்தை சேர்ந்தவர்களும் மதத் தலைவர்களும் அன்னையின் குடும்பத்தவர்களும் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் முன்னணி அப்பொதுக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது. இது திலீபனின் நினைவுத் தூபிக்கு முன் ஏற்பட்ட முரண்பாட்டை நினைவுபடுத்துகின்றது. புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கு தனக்குத்தான் அதிகம் உரித்தும் தகுதியும் உண்டு என்று முன்னணி கருதுகின்றது. அதன்மூலம் புலிகள் இயக்கத்தின் விசுவாசமான தொடர்ச்சியாகவும் அக்கட்சி தன்னை காட்டிக்கொள்ள விளைகின்றது. ஆனால் அதை அவர்கள் தமது செயற்பாட்டில் நிரூபிக்க வேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியலைத் தொடர்வது என்பது, அதுவும் மிதவாத அரசியலில் அதைத் தொடர்வது என்பது சாராம்சத்தில் அந்த இயக்கத்தைப்போல அர்ப்பணிப்புகளுக்கு தயாராக இருப்பதுதான். ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக முன்னணி அப்படிப்பட்ட தியாகங்களைச் செய்திருக்கின்றதா?



பொலிசாரோடும் படைகளோடும் நெத்திக்கு நேரே மோதுவதும், துணிச்சலாகக் கதைப்பதும், தள்ளுமுள்ளுப்படுவதும், சில மணித்தியாலங்கள் சிறையில் இருப்பதும், சாகசச் செயல்களே. அவற்றைத் தியாகம் என்று கூற முடியாது. தமிழ் மக்கள் கடந்துவந்த செயற்கரிய தியாகங்களோடு ஒப்பிடுகையில் இவையெல்லாம் தியாகங்களா? திலீபனையும் பூபதியையும் படங்களாக வாகனங்களில் காவித் திரிவது மட்டும் போதாது. அதைவிட ஆழமாக திலீபனைப்போல பூபதியைப்போல உண்ணாவிரதம் இருப்பதற்கு எத்தனை பேர் தயார்?

கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த ஏழு கட்சிகள் மட்டுமல்ல, கடையடைப்பைப் பரிகசித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் கடந்த 13 ஆண்டுகளாக கொழும்பின் கவனத்தையும் உலகத்தையும் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் போராடத் தவறியிருக்கிறது. அரசியலில் மற்றவர்களை விமர்சிப்பதால் ஒரு கட்சி தூய்மையானது ஆகிவிடாது. மாறாக மற்றவர்கள் செய்யத் தவறியதைத்தான் செய்ய வேண்டும். மற்றவர்களைத் துரோகிகளாக்குவதால் ஒருவர் தியாகிவிட முடியாது மாறாக தான் செய்யும் தியாகங்களால்தான் ஒருவர் தியாகியாக முடியும்.



தமது மக்கள் மத்தியில் மட்டுமல்ல, அனைத்துலக அரங்கிலும் தமிழ் அரசியலின் அந்தஸ்தை உயர்த்தும் விதத்தில் தமிழ்க்கட்சிகள் உழைத்திருக்கின்றனவா? கடந்த 13ஆண்டுகளில் தமிழ்க்கட்சிகள் அனைத்துலக அளவில் சம்பாதித்த புதிய நட்புகள் எத்தனை? உள்ளூரில் சக தமிழ்க் கட்சிகளோடு தந்திரோபாயக் கூட்டுக்களைக்கூட வைத்துக் கொள்ளமுடியாத கட்சிகள், எப்படி வெளியரங்கில் உலக சமூகத்தோடு கூட்டுக்களை வைத்துக் கொள்வது?

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசியல் அந்தஸ்தை மதிப்பிடுவதற்கு ஆகப்பிந்திய ஒர் உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டலாம். சில மாதங்களுக்கு முன் கனடாவுக்கு வெளிக்கிட்ட 303 தமிழர்கள் சிங்கப்பூர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது காப்பாற்றப்பட்டு வியட்நாமில் இடைத்தங்கல் முகாமில் வைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒரு தொகுதியினர் நாடு திரும்பி விட்டார்கள். அவர்கள் விருப்பத்தோடு நாடு திரும்பவில்லை. இந்த நாட்டில் இருக்கப் பிடிக்காமல்தான் புலம்பெயர முயற்சித்தார்கள். அவ்வாறு திரும்ப விரும்பாதவர்கள் ஐநாவுக்கு மீண்டும் மீண்டும் மேன்முறையீடு செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மேன் முறையீடுகளும் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்.

அவ்வாறு மேன்முறையீடு செய்த சிலர் நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் சிலருடைய பரிந்துரைக் கடிதங்களையும் சமர்ப்பித்ததாக அறியமுடிகிறது. ஆனால் வியட்நாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் தமிழ் புலம்பெயரிகளை, ஐநா,ஐ.ஓ.எம் போன்றன சட்டவிரோதக் குடியேறிகளாகத்தான் பார்க்கின்றன. அவர்களை அரசியற் காரணங்களுக்காக குடி பெயரை முற்பட்டவர்கள் என்று பார்க்கவில்லை என்று தெரிகிறது. அதனால் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய கடிதங்களை மேற்சொன்ன அனைத்துலக நிறுவனங்கள் பொருட்படுத்தவில்லை. விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்கள் படிப்படியாக நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்.

புலம்பெயரிகளின் விடயத்தில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளை உலகப்பொது அமைப்புக்கள் பொருட்படுத்தவில்லை என்று தெரிகிறது. அதாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு உலகப் பொது அமைப்புகள் கொடுக்கும் மரியாதை அவ்வளவுதான். அப்படியென்றால் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஐநா போன்ற கட்டமைப்புகளின் மீதும் உலகின் வெளியுறவு கட்டமைப்புகளின் மீதும் எவ்வாறான செல்வாக்கைச் செலுத்த முடியும்?

இதுதொடர்பாக தமிழ்க் கட்சிகளிடம் ஏதாவது வழிவரைபடங்கள் உண்டா? அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டு தமிழர்களை அரவணைக்க வேண்டிய தேவை உலகில் எந்த ஒரு அரசுக்காவது உண்டா? அரசுகள் எது பலமோ,எது தேவையோ அதைத்தான் நாடிவரும். எங்கே நீதி இருக்கிறது என்று பார்த்து நாடி வருவதற்கு பூமியொன்றும் தேவ ராஜ்ஜியம் அல்ல. தமிழ் மக்கள் தமது பேர பலத்தை அதிகப்படுத்த வேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணியை பெரும்பாலான தூதரகங்களும் ஐநாவும் ஆர்வத்தோடு கவனித்தன. ஏன் தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சி போராட்டங்களையும் வெளிநாட்டு தூதரகங்கள் ஆர்வத்தோடு கவனித்தன. ஆர்வத்தோடு கையாண்டன என்று கூடச் சொல்லலாம். தமிழ் மக்களுக்கான நீதியைப் பெறப்போவதாக கூறிக் கொள்ளும் கட்சிகள் முதலில் தொடர்ச்சியான போராட்டங்களை ஒழுங்கமைக்க வேண்டும்.

கடந்த 13 ஆண்டுகளில் வெற்றி பெற்ற எல்லா மக்கள் போராட்டங்களும் ஒரு கட்சிப் போராட்டங்கள் அல்ல. குடிமக்கள் சமூகங்களோடு இணைந்த பல கட்சிப் போராட்டங்கள்தான். எனவே போராடத் தெரியாத அல்லது போராட முடியாத கட்சிகள் கடையடைப்புக்கு அழைப்புவிடுகின்றன. அதேசமயம் அப்போராட்டம் பிழை என்று கூறும் கட்சியும் கடந்த 13 ஆண்டுகளாக சின்னப் பிள்ளைகளுக்கு கண்ணாடியில் நிலவை காட்டும் அரசியலைத்தான் செய்து கொண்டிருக்கிறது.



# சட்டவிரோதமாக மதுபானம் கொண்டு சென்றவர்கள் கைது

அக்கரைப்பற்று, மே. 04

அனுமதி பத்திரமின்றி சட்டவிரோதமாக கொண்டு சென்ற மதுபான போத்தல்களை சவளக்கடை பொலிஸார் மீட்டுள்ளனர்.

சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் பியர் மற்றும் மதுபானப் போத்தல்கள் ஒட்டோ ஒன்றின் ஊடாக வெல்லாவெளி பகுதிக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்யப்படுவதாக சவளக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான டீ.எம்.எஸ்.கே தசநாயக்க தலைமையிலான பொலிஸ் குழுவுக்கு கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றை தொடர்ந்து வீதி ரோந்து நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது ஒட்டோ ஒன்றில் சுமார் 38 மற்றும் 33 வயது மதிக்கத்தக்க இரு சந்தேக நபர்கள் 175 இற்கும் அதிகமான மதுபானப் போத்தல்கள் மற்றும் பியர் ஆகியவற்றை சூட்சுமமாக மறைத்து எடுத்துச் செல்ல முற்பட்டுள்ளனர். சம்பவ இடத்தில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழுவினர் 2 சந்தேக நபர்களை கைது செய்ததுடன் ஒட்டோ மற்றும் மதுபானப் போத்தல்களை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட மதுபானப் போத்தல்கள் பல இலட்சம் பெறுமதியானவை எனவும் அளவுக்கு அதிமான மதுபான போத்தல்களை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் உரிய அனுமதி இன்றி சட்டவிரோதமாக பதுக்கிக்கொண்டு சென்றமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். (அ)

# மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லூரி மாணவர்கள் இருவருக்கு தங்கம்



மட்டக்களப்பு, மே. 04

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விஞ்ஞான வினா-விடைப் போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் இருவருக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

கிழக்கு மாகாணக் கல்வித் திணைகளத்தினால் மாகாணத்திலுள்ள 17 கல்வி வலயங்களுக்கிடையிலும் உள்ள மாணவர்களுக்கிடையில் விஞ்ஞானக்கல்வியை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின்மூலம் மும்மொழியிலும் விஞ்ஞான வினா விடைப் போட்டியை கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் தலைமையில் மட்டக்களப்பு கிரான் மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடத்தியது.

தரம் 6 தொடக்கம் 11 வரையுள்ள மாணவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த ந.விஷால், உ.துவாரகேஸ் ஆகிய இரு மாணவர்களும் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள் ளனர்.

இப்போட்டியில் கல்லூரியைச் சேர்ந்த 8 மாணவர்கள் பங்குபற்றி வெண்கலம், வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்கள்.

இப்பாடசாலையை சேர்ந்த 10 மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து நற்சான்றிதழ்களும் மாகாணக்கல்வி பணிப்பாளரினால் வழங்கப்பட்டது. (அ)

# கல்முனை வடக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய தலைவராக ஸ்ரீவேல்ராஜா தெரிவு

அக்கரைப்பற்று, மே. 04

கல்முனை வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக வங்கியாளர் இராசையா ஸ்ரீவேல்ராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார் .

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற புதிய இயக்குனர் சபை தெரிவின்போதே இவர் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார் .

இதன் உப தலைவராக இராஜகோபால் நடராஜா தெரிவு செய்யப்பட்டதுடன் இவர்களைத் தவிர ஏழு பேர் கொண்ட இயக்குநர் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

முன்னாள் தலைவர் சுப்பிரமணியம் அரசரெத்தினம், மார்க்கண்டு லோகராஜா , கிருஷ்ணபிள்ளை நாகராஜா, அன்புமணி ராஜினி, நிரோஜனா பற்மராஜா, தவராஜா வினிதா,குணரெட்னம் கேதீஸ் , ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)






# காரைதீவில் களைகட்டிய நாட்டிய சங்கமம் நிகழ்வு!





அக்கரைப்பற்று, மே. 04

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சுவாமி விபுலானந்தர் நாட்டிய நிருத்தியாலய மாணவிகளின் “திக்கெட்டும் சதிரே” என்ற நாட்டிய சங்கமம் கடந்த திங்கட்கிழமை மாலை சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச நடன தினத்தையொட்டி காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

சீர் பெறு அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி புளோரன்ஸ் கென்னடி கலந்து சிறப்பித்தார்.

மேலும் முதன்மை அதிதிகளாக கிழக்கு பல்கலைக்கழக அழகிய கற்கைகள் நிறுவனத்தின் நடன நாடகத்துறை தலைவர் கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சிதகுமார் கலந்து சிறப்பிக்க சிறப்பு அதிதிகளாக உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர் திருமதி ரீஷா பத்திரண, விபுலானந்த மணிமண்டப தலைவர் வெ.ஜெயநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சுவாமி விபுலானந்தர் பயிற்சி நிலைய விபுலானந்த நாட்டிய நிருத்தியாலய பரத நாட்டிய வளவாளர் திருமதி சர்மினி சுதாகரன் மற்றும் உதவி வளவாளர் செல்வி ஜெயகோபன் தக்சாளினி ஆகியோர் நடனதின விழாவை நெறியாள்கை செய்தனர்.

கலைத்துறைக்கு அளப்பரிய சேவையாற்றி வரும் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகிய கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி புளோரன்ஸ் கென்னடி, நடனநாடகத்துறை தலைவர் கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷர்மிளா ரஞ்சிதகுமார் ,பரத நாட்டிய வளவாளர் திருமதி சர்மினி சுதாகரன், உதவி வளவாளர் செல்வி ஜெயகோபன் தக்சாளினி ஆகியோர் மேடையில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு ஜெயராஜ் நன்றியுரை ஆற்றினார்.

விழாவில் பங்கேற்ற 150 நடனத்துறை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் அதிதிகளால் வழங்கப்பட்டன. (அ)

# தரம் 11இற்கு மாணவர்களை சேர்க்க எழுத்துமூல அனுமதி

அக்கரைப்பற்று, மே. 04

அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் வித்தியாலயத்தில் அடுத்த கல்வியாண்டில் தரம் 11 இற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு எழுத்துமூல அனுமதியை வழங்கியுள்ளது.

அத்துடன் 2023 கல்வியாண்டுக்காக தரம் 10 இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆண்கள் வித்தியாலயமானது வகை-2 (தரம் 1-11) வகைப்படுத்தலுக்குரிய பாடசாலையாக கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

1945ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில், இதுவரை தரம் 9 வரை மாணவர்கள் கல்வி கற்றுவந்த நிலையில், அதனை மேலும் தரமுயர்த்துவதற்கு கடந்த காலங்களில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் அவை கைகூடவில்லை.

இவ்வாறான பின்னணியில், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகிவற்றின் அயராத முயற்சியினாலும் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா, உயரதிகாரிகள், பாடசாலைச் சமூகம், மற்றும் சம்பந்தப்பட்ட பெற்றோரின் ஆதரவினாலும் இவ் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. (அ)



உள்ளூராட்சி நிதி முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் விழா நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்றது.

டிப்ளோமா பயிற்சியை பூர்த்தி செய்த ஒருவருக்கு சான்றிதழை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் வழங்குகிறார். (அ)

# ஆக்கிரமிப்பை எதிர்க்காதோரால் கிழக்கை எவ்வாறு மீட்க முடியும்?

**கேள்வி எழுப்புகிறார் கலையரசன் எம்.பி.**



மட்டக்களப்பு, மே. 04

**கிழக்கு மீட்பர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எமது இருப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாகவே இருக்கின்றது. வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலே நடைபெறுகின்ற சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒரு கருத்துக் கூட வெளியிடாதவர்களால் எங்கள் இனத்தை எவ்வாறு காப்பாற்ற முடியும்? கிழக்கை எவ்வாறு மீட்க முடியும்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வியெழுப்பினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- எமது நாடு சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு இன்று வரை எமது தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து இன்றுவரை ஒரு நியாயமான தீர்வு இல்லையென்ற ஆதங்கத்தோடு இருந்து வருகின்றனர்.

இந்த நாட்டில் பௌத்த மேலாதிக்கம் மேலோங்கி எமது தமிழர்களின் எதிர்காலம், இருப்பு, கலாசாரம் சம்பந்தப்பட்ட விடயங்களில் தொடர்ச்சியான அடக்கு முறைகளையும், ஒடுக்கு முறைகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

இதற்கெல்லாம் எங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களே துணையாக இருந்து செயற்படுவதுடன், அவர்கள் சிங்களப் பேரினவாதம் போடுகின்ற தாளத்திற்கு ஆடுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆனால் பேச்சில் மாத்திரம் கிழக்கை மீட்பது பற்றிப் பேசுகின்றார்கள்.

2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டபோது நானும் அரசியலில் இருந்தவன். கிழக்கை மீட்கப் புறப்பட்டவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளையும் நானும் அனுபவித்தவன். அவர்கள் மாகாண சபையில் இருந்தபோது நான் பிரதேச சபையின் தவிசாளராக இருந்தவன் என்ற வகையில் அந்த நான்கரை வருடங்களாக எமது கிழக்கு மாகாணத்தையும், எமது சமூகத்தையும் ஏமாற்றியவர்கள் இன்னும் இன்னும் ஏமாற்றுவதற்கான சகல வேலைகளையும் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்குப் பின்னால் நமது இளைஞர்கள் செல்வது தான் மிகவும் மன வேதனையான விடயம்.

உண்மையிலேயே எமது சமூகம் மீண்டும் மீண்டும் இவர்களுக்குப் பின்னால் சென்றால் எதிர்காலத்திலும் ஏமாற்றத்தைச் சந்திக்கப் போவதே உறுதி. ஏனெனில் அவர்களின் ஒவ்வொரு செயற்பாடும் தமிழ் மக்களுக்கென்று இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியை வலுவிழக்கச் செய்வதே.

நாங்கள் ஒரு புனித பயணத்தைப் பயணிக்கின்றோம். எங்களுடைய செயற்பாடுகளை எவராலும் அழிக்க முடியாது. ஆனால் அவர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளவேண்டும். அவர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எமது இருப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளாகவே இருக்கின்றன. அண்மைக் காலங்களிலே வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலே நடைபெறுகின்ற சிங்கள, பௌத்த ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக ஒரு கருத்துக் கூட வெளியிடாதவர்களால் எங்களுடைய இனத்தை எவ்வாறு காப்பாற்ற முடியும்? கிழக்கை எவ்வாறு மீட்க முடியும்? தற்போது இந்த ஆட்சி இடம்பெற்று சுமார் மூன்று வருடங்களாகின்றது. அவர்களால் என்ன வேலைத் திட்டத்தை முன்னெடுக்க முடிந்திருக்கின்றது? எத்தனை தொழில் வாய்ப்புகளை வழங்க முடிந்திருக்கின்றது?

இன்று கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச தரப்போடு இணைந்து இரண்டு இராஜாங்க அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பதவிகள் எமது இருப்பை இல்லாதெழிப்பதற்காகவே அவர்களுக்கு வழங்கப்பட்டவை என்பதை இன்று எமது மக்கள் உணர்ந்திருக்கின்றார்கள். இனியும் இவர்களால் எமது மக்களை ஏமாற்ற முடியாது.

எனவே நாங்கள் ஒன்றுபட வேண்டும்-என்றார். (அ)

# சூடானிலிருந்து 8 இலட்சம் பேர் வெளியேறும் அச்ச நிலைமை!

## ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

கார்ட்டூம், மே. 04

**சூடானில் உக்கிர மோதல் தொடரும் நிலையில் 800,000 பேர் வரை அங்கிருந்து வெளியேறலாம் என்று ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.**

போர் நிறுத்தத்தை மீறி தலைநகர் கார்டூமில் மீண்டும் குண்டுச் சத்தம் கேட்ட வண்ணம் உள்ளது. சூடானில் மூன்றாவது வாரமாக வன்முறை தொடர்கிறது.

அருகிலுள்ள எகிப்து, சாட், மத்திய ஆபிரிக்கக் குடியரசு ஆகிய நாடுகளுக்கு 10,000 க்கும் அதிகமானோர் தப்பிச் சென்றுவிட்டனர்.

சூடானில் இராணுவத்துக்கும், அதன் துணை இராணுவ ஆதரவுப் படைக்கும் இடையிலேயே மோதல் நீடிக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானத்துறை அதிகாரி மார்ட்டின் கிரிபித்ஸ் நேற்று முன்தினம் பிற்பகல் சூடானை சென்றடைந்தார்.

சூடானில் வசிக்கும் மில்லியன் கணக்கானோருக்கு நிவாரண உதவி வழங்குவதற்கான வழிகளை



அவர் ஆராய்வார்.

சூடானில் மனிதாபிமான நிலைமை மோசமடைந்து பேரழிவை எட்டுவதாக கிரிபித்ஸ் குறிப்பிட்டார். (அ)



# பிரதமர் வேட்பாளர் குழந்தை பிரசவம்

பாங்கொக், மே. 04

தாய்லாந்தில் பொதுத் தேர்தலுக்கு இரண்டு வாரங்களே உள்ள நிலையில் பிரதமர் வேட்பாளர் பாய்தோங்டார்ன் ஷினவத்ராவுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது.

கடந்த திங்கள் காலை பிள்ளை பிறந்ததை அவரின் கட்சி உறுதி செய்துள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி பாங்கொக் நகரில் நடைபெறவிருக்கும் இறுதிப் பிரசாரத்தில் பாய்தோங்டார்ன் நிச்சயமாகக் கலந்துகொள்வார் என்று கூறப்பட்டது.

பிள்ளை பிறந்த செய்தியைத் பாய்தோங்டார்ன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துகொண்டார். (அ)

# பக்கிங்காம் அரண்மனைக்குள் மர்ம பொருள் வீசிய நபர் கைது



லண்டன், மே. 04

பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள பக்கிங்காம் அரண்மனைக்குள் வெடிமருந்தை வீசியெறிந்த மர்ம நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னர் மூன்றாம் சாள்ஸின் முடிசூட்டு விழா நடைபெறவிருக்கும் நிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மெட்ரோபாலிட்டன் பொலிஸ் அதிகாரி தெரிவிக்கையில்- பக்கிங்காம் அரண்மனையின் வாயிலுக்கு வந்த மர்ம நபர் ஒருவர் துப்பாக்கி தோட்டாக்களுக்கான வெடிப் பொருளை அரண்மனைக்குள் வீசியெறிந்துள்ளார்.

மீண்டும் மீண்டும் அவர் அதைச் செய்த நிலையில் அவரை பாதுகாவலர்கள் மற்றும் பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்துள்ளனர்.

பின்னர் அந்தப் பொருட்களை சேகரித்து பாதுகாப்பாக வெடிக்கச் செய்துள்ளனர், மர்ம நபர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நிகழ்விடத்தில் வேறு ஏதும் அசம்பாவிதம் நடைபெறவில்லை-என்றார்.

# செயற்கை நுண்ணறிவால் மனித குலத்துக்கு ஆபத்து!

## உருவாக்கிய விஞ்ஞானி பதவி துறந்தார்

நியூயோர்க், மே. 04

செயற்கை நுண்ணறிவின் (AI) பிதாமகன் என்று பரவலாகக் கருதப்படும் விஞ்ஞானி ஜெப்ரி ஹிண்டன் துறையில் ஏற்படும் வளர்ச்சிகளால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து எச்சரித்து தனது வேலையை விட்டுவிட்டார்.

75 வயதான ஜெப்ரி ஹிண்டன், கூகுள் நிறுவனத்தில் இருந்து ராஜினாமா செய்வதாக நியூயோர்க் ரைம்ஸ் நாளிதழுக்கு அளித்த அறிக்கையில் அறிவித்தார்.

செயற்கை நுண்ணறிவால் மனித குலத்துக்குத் தீங்கு ஏற்படுமென்றும், அதை உருவாக்கியமைக்காக வருந்துவதாகவும் கூறினார்.

“எனக்கு 75 வயதாகிறது, அதனால் ஓய்வுபெற வேண்டிய நேரம் வந்துவிட்டது” என்று கூறிய ஹிண்டனும், தொழில்நுட்ப நிறுவனத்தை விட்டு விலகுவதற்கான தனது முடிவில் அவரது வயதும் பங்களித்தது என்பதை ஏற்றுக்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவு குறித்த தமது ஆய்வு குறித்து வருந்துவதாக அவர் பேட்டியில் குறிப்பிட்டார்.

ChatGPT போன்ற செயற்கை நுண்ணறிவுத்



தளங்களால் மனித குலத்துக்கு ஏற்படக்கூடிய அபாயத்தை நினைக்கும்போது பயமாக இருப்பதாக அவர் சொன்னார்.

இப்போதைக்குச் செயற்கை நுண்ணறிவு மனிதரைவிடக் கூடுதல் தகவல்களைச் சேகரிக்கும் ஆற்றலை மட்டுமே பெற்றுள்ளது. ஆனால் விரைவில் அது சிந்திக்கும் ஆற்றலில் மனிதரை விஞ்சும் அபாயம் உள்ளது என்று விஞ்ஞானி ஹிண்டன் எச்சரித்தார்.

(அ)

# ஜிகாத் பிரமுகர் இஸ்ரேல் சிறையில் உண்ணாவிரதம் இருந்து உயிரிழப்பு

ஜெருசலேம், மே. 04

பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பின் மூத்த பிரமுகர் காதர் அட்னான் 86 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பின்னர் இஸ்ரேல் சிறையில் மரணமடைந்துள்ளார்.

இன்று அதிகாலை சுயநினைவின்றி காணப்பட்ட அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போதும் அவரை காப்பாற்ற முடியவில்லை என இஸ்ரேல் சிறைச்சாலை சேவை தெரிவித்துள்ளது.

மருத்துவ பரிசோதனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ள காதர் அட்னான் மறுத்துவிட்டதாக இஸ்ரேல் சிறைச்சாலை சேவை தெரிவித்துள்ளது.

மரணம் அறிவிக்கப்பட்ட பின்னர், காசா பகுதியில் இருந்து போராளிகள் மூன்று ரொக்கெட் தாக்குதலை மேற்கொண்டதாகவும் இருப்பினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவர் சிறையில் இறந்தால், இஸ்ரேலுக்கு பெரிய



விலை கொடுக்கப்படும் என முன்னதாக காஸா பகுதியை தளமாகக் கொண்ட இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு எச்சரித்திருந்தது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இஸ்ரேலிய சிறையில் அடைக்கப்பட்டுள்ள அவர் ஐந்து முறை உண்ணாவிரத போராட்டத்தை நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# தென்கொரியாவுக்கு விஜயம் செய்கிறார் ஜப்பான் பிரதமர்

ரோக்கியோ, மே. 04

ஜப்பான் நாட்டின் ஹிரோஷிமா பகுதியில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜி-7 மாநாடு நடைபெற வுள்ளது.



தற்போது ஆபிரிக்க நாடான கானாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா இந்த மாநாட்டுக்கு முன்னர் தென்கொரியா செல்ல திட்டமிட்டுள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி மற்றும் 8 ஆம் திகதிகளில் தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாகவும், இரு நாடுகளின் உறவுகளை வளர்ப்பதற்கான வாய்ப்பாக அது அமையும் எனவும் ஜப்பான் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின் போது வேகமாக மாறிவரும் சர்வதேச சூழ்நிலைகள் குறித்து வெளிப்படையாக கருத்துகளை பரிமாறிக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும்’ எனவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)



# லக்னோவுக்கு பின்னடைவு உனாத்கட்டும் விலகினார்!

லக்னோ, மே 04

கே. எல். ராகுலை தொடர்ந்து லக்னோ அணியின் வேகப்பந்து வீச்சாளரரான ஜெயதேவ் உனாத்கட் காயம் காரணமாக விலகியுள்ளார். இது அந்த அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

16ஆவது ஐ.பி.எல். தொடர் முக்கிய கட்டத்தை நெருங்குகிறது. இந்தத் தொடரில் முன்பு எப்போதும் இல்லாததைவிட பெரும்பாலான ஆட்டங்களின் முடிவுகள் மிகவும் நெருக்கமாக அமைவதால் முதல் 4 இடங்களை பிடிப்பது யார் என்பதை கணிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது. குறைந்தது 9 போட்டிகளில் வெற்றி பெற்றால்தான் சிக்கலின்றி 'பிளே-ஓவ்' சுற்றை அடைய முடியும்.

முன்னதாக, லக்னோ அணியின் தலைவர் கே. எல். ராகுல் பெங்களூருடனான போட்டியில் காயமடைந்திருந்தார். இதையடுத்து அவர் போட்டியிலிருந்து விலகினார்.

இந்த நிலையில், லக்னோ அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜெயதேவ் உனாத்கட் நடப்பு ஐ. பி. எல். தொடரில் இருந்து விலகியுள்ளார். வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அவர் தடுமாறி கீழே வீழ்ந்ததில் தோளில் காயமடைந்தார். இதையடுத்தே அவர் நடப்பு தொடரிலிருந்து விலகியுள்ளார். (ஐ)




# கடைசி ஐ. பி. எல். தொடரா...? டோனியின் பதில் என்ன?

புனே, மே 04

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அணியின் தலைவர் டோனி நடப்பு ஐ. பி. எல். தொடருடன் ஓய்வு பெறுவார் என்று பரவலான கருத்துகள் நிலவுகிறது.

ஆனால், தனது ஓய்வு குறித்து டோனி இதுவரை எந்த வித அதிகாரபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லை.

நேற்றைய தினம் புனேயில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டோனி களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

அந்தச் சமயம், நிகழ்ச்சி தொகுப்பாளர் டேனி மோரிசன், இது உங்கள் கடைசி ஐ. பி. எல்... மைதானத்தில் ரசிகர்களின் ஆதரவால் மகிழ்ச்சியடைகிறீர்களா? என்று டோனியிடம் கேட்டார். அதற்கு பதிலளித்த டோனி, "இதுதான் என் கடைசி ஐ. பி. எல். என்று நீங்கள் முடிவு செய்துள்ளீர்கள்... ஆனால், நான் முடிவு செய்யவில்லை' என்று கூறினார்.

உடனடியாக டேனி மோரிசன் டோனியைப் பார்த்து,"நீங்கள் அடுத்த ஐ. பி. எல். தொடரிலும் பங்கேற்பீர்கள் எனக்கு தெரியும்", என்றார். பின்னர் மைதானத்தில் இருந்த ரசிகர்களை நோக்கி பேசிய டேனி மோரிசன், "டோனி மீண்டும் வருவார்.. டோனி அடுத்த ஐ. பி. எல். தொடரிலும் பங்கேற்க வருவார்", என்றார். (ஐ)

# அற்புதம் காட்டிய இஷாந்த் டில்லி கப்பிட்டல்ஸ் வெற்றி!

அகமதாபாத், மே 04

நடப்பு ஐ. பி. எல். தொடரில் 44ஆவது போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் அணியை 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி உள்ளது டில்லி கப்பிட்டல்ஸ். கடைசி ஓவரை அற்புதமாக வீசி ஆறு ஓட்டங்கள் மட்டுமே கொடுத்திருந்தார் டில்லி அணியின் பந்துவீச்சாளர் இஷாந்த் சர்மா.

131 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை குஜராத் ரைட்டன்ஸ் அணி விரட்டியது. முதல் ஓவர் முழுவதையும் எதிர்கொண்டு ஓட்டம் ஏதும் எடுக்காமல் விக்கெட்டை இழந்தார் சஹா. அவரது விக்கெட்டை கலீல் அகமது கைப்பற்றினார்.

தொடர்ந்து நான்காவது ஓவரில் ஷூப்மன் கில் மற்றும் ஐந்தாவது ஓவரில் விஜய் சங்கரும் தங்கள் விக்கெட்களை இழந்தனர். தொடர்ந்து ஏழாவது ஓவரில் டேவிட் மில்லர் விக்கெட்டை இழந்தார். அதன் பின்னர் அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா மற்றும் அபினவ் மனோகர் இடையே 62 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைந்தது. அபினவ், 33 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார்.

18ஆவது ஓவரை கலீல் அகமது அற்புதமாக வீசி இருந்தார். இருந்தும் 19ஆவது ஓவரை வீசிய நோர்ட்ஜேவின் ஓவரில் 21 ஓட்டங்கள் எடுத்தது குஜராத். ராகுல் திவாட்டியா, ஹட்ரிக் சிக்ஸர் விளாசி அசத்தினார்.

கடைசி ஓவரில் குஜராத் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட இஷாந்த் சர்மா அந்த ஓவரை வீசினார். 2, 1, 0, விக்கெட், 2 மற்றும் 1 என மொத்தம் 6 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றி அசத்தினார். அந்த ஓவரில் அதிரடி ஆட்டத்தின் மூலம் அச்சுறுத்தி வந்த திவாட்டியாவை அவர் வெளியேற்றினார். 7 பந்துகளில் 20 ஓட்டங்களை அவர் எடுத்திருந்தார். இதன் மூலம் டில்லி அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஹார்திக் பாண்ட்யா, 53 பந்துகளில் 59 ஓட்டங்கள் எடுத்து இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.




முன்னதாக, இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி துடுப்பெடுத்தாடியது. மிகவும் மோசமான தொடக்கம் அமைந்தது. முதல் பந்திலேயே பிலிப் சால்ட் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரில் டேவிட் வோர்ணர் ரன் அவுட். 3ஆவது ஓவரில் ரோசோவ் ஆட்டமிழந்தார். அடுத்து பிரியம் கார்க் என முதல் 5 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து வெறும் 23 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது டில்லி.

அமன் ஹக்கீம் கான் மற்றும் அக்சர் பட்டேல் இணைந்து ஓட்ட எண்ணிக்கையை கூட்டினர். ஆனாலும் அக்சர் பட்டேல் 27 ஓட்டங்களிலும், அமன் ஹக்கீம் கான் 51 ஓட்டங்களிலும் வெளியேற, அடுத்து வந்த வீரர்கள் சோபிக்காததால் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்த டெல்லி, 130 ஓட்டங்களை மட்டுமே சேர்த்திருந்தது. (ஐ)

# ஷமியிடம் மன்னிப்பு கேட்டார் ஹார்திக்!

அஹமதாபாத், மே 04

டில்லியுடனான தோல்வியை அடுத்து, குஜராத் அணியின் தலைவர் அந்த அணியின் பந்துவீச்சாளர் முகமது ஷமியிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் டில்லி அணி பரபரப்பான ஆட்டத்தில் குஜராத்தை வீழ்த்தி 3ஆவது வெற்றியைப் பெற்றது.

இதனால், புள்ளிகள் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கும் குஜராத் அணி 3ஆவது தோல்வியை தழுவியது. 131 ஓட்டங்களை எடுக்க முடியாமல் டில்லியிடம் அந்த அணி தோற்றது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. போட்டியின் முடிவில் கருத்து வெளியிட்ட அந்த அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா, "இந்த எளிய இலக்கை எந்த நாளாக இருந்தாலும் நாங்கள் வெற்றிகரமாக துரத்தி இருப்போம். முக்கியமான கட்டத்தில் விக்கெட்களை இழந்து விட்டோம். ராகுல் திவேதியா அதிரடியாக விளையாடி எங்களை மீண்டும் ஆட்டத்துக்கு கொண்டு வந்தார். இதனை பயன்படுத்திக் கொண்டு அணியை வெற்றி பெற வைக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால், என்னால் அது முடியவில்லை. நடு ஓவர்களில் மிகப்பெரிய ஓட்டங்களை குவிக்கலாம் என்று எதிர்பார்த்தோம். நான் கடுமையாக முயற்சித்தேன். இந்த தோல்விக்கு நான்தான் முக்கிய காரணம். இந்த தோல்விக்கு முழு பொறுப்பேற்கிறேன்.

டில்லி அணியை நான் பாராட்டுகிறேன். அவர்கள் உண்மையிலேயே சிறப்பாக பந்துவீசி எங்களுக்கு நெருக்கடி கொடுத்தார்கள். ஆடுகளத்தை நான் குறை சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், நாங்கள் இங்குதான் பயிற்சி பெற்றோம். இந்தத் தோல்விக்காக முகமது சமியிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். அவருக்காக நான் நிச்சயம் வருந்துகிறேன். பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டார்கள். ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றத்தை அளித்துவிட்டனர்.இன்னும் போட்டிகள் இருக்கின்றன. இந்த போட்டி மூலம் நாங்கள் பல விஷயங்களை கற்றோம். நல்ல கிரிக்கெட்டை வெளிப் படுத்துவது அவசியமானது - என்றார்.



# மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் சபலென்கா அரையிறுதியில்

மட்ரிட், மே 04

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கார்லஸ் அல்காரஸ் காலிறுதிக்கு தகுதி பெற்றார். இதேபோன்று பெண்கள் பிரிவில் சபலென்கா அரையிறுதிக்கு முன்னேறினார்.

மட்ரிட் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் 4ஆவது சுற்று போட்டியில் தரவரிசையில் கார்லஸ் அல்காரஸ் (ஸ்பெயின்) 6-1, 6-2 என்ற நேர் செற்றில் ஒலிம்பிக் சாம்பியன் அலெக்சாண்டர் ஸ்வெரேவை (ஜேர்மனி) வெளியேற்றி காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி போட்டி ஒன்றில் அவுஸ்திரேலிய ஓப்பன் சம்பியனும், தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருப்பவருமான அரினா சபலென்கா (பெலாரஸ்) சரிவில் இருந்து மீண்டு வந்து 2-6, 6-2, 6-1 என்ற செற் கணக்கில் எகிப்தின் மேயர் ஷெரிப்பை வீழ்த்தி அரையிறுதியை எட்டினார். (ஐ)

# நிதிப் பற்றாக்குறையினால் மூடப்படும் 4 நிறுவனங்கள்

கொழும்பு, மே. 04

மக நெகும மற்றும் அதனுடன் இணைந்த நான்கு நிறுவனங்களை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இன்று காலை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களை பராமரிப்பதற்கு நிதி பற்றாக்குறை நிலவுதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

'மக நெகும' வீதி கட்டுமான உபகரண நிறுவனம், 2004 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இது முன்னர் இருந்த வீதி கட்டுமான அபிவிருத்தி நிறுவனத்தின் மறு உருவாக்கமாக இருந்தது.

எவ்வாறாயினும், இந்த அரச நிறுவனமும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் அவற்றைப் பராமரிப்பதற்கான நிதிப் பற்றாக்குறையால் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

அரச நிறுவன மறுசீரமைப்பின் கீழ் இந்த நிறுவனங்கள் கலைக்கப்படும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

(அ)

# போலி நாணயத்தாள்களுடன் இராணுவச் சிப்பாய் கைது!

கொழும்பு, மே. 04

5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் வைத்திருந்ததாக கூறப்படும் இராணுவ சிப்பாய் ஒருவர் சந்தேகத்தின் பேரில் மஹவ தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் இராணுவ முகாமில் கடமையாற்றும் 22 வயதுடைய மொரகொல்லாகம பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான இராணுவச் சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் இராணுவ முகாமில் இருந்து விடுமுறையில் சென்றிருந்தபோது போலி நாணயத்தாள்களுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ தலைமையக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# வெசாக் காலத்தில் கொரோனா வழிகாட்டல்களைப் பின்பற்றுக!

கொழும்பு, மே. 04

நாட்டில் ஒவ்வொரு நாளும் சுமார் ஏழு கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதால், வெசாக் காலப்பகுதியில் கோவிட் தொடர்பான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறு தொற்றுநோயியல் திணைக்களத்தின் வைத்தியர் சமித கினிகே மக்களைக் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொரோனா வைரஸ் பரவி வரும் நிலையில், மக்கள் நெரிசலான இடங்களுக்கு செல்வதை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெசாக் பண்டிகையின்போது மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவர் இருந்தால், வைரஸ் பரவல் அதிகரிக்கலாம். மேலும் காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால், மக்கள் நெரிசலான இடங்களுக்கு செல்வதை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

(அ)

# ஓகஸ்ட் மாதம் முதல் மீற்றர் பொருத்தாத ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடமுடியாது!

## யாழ். அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 04

**யாழ்.மாவட்டத்தில் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டண மீற்றர் பொருத்தாத ஓட்டோக்கள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ஆ. சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்.மாவட்டத்தில் வாடகைக்குச் செலுத்தும் ஓட்டோக்கள் கட்டண மீற்றர் பொருத்தாமையினால் ஓட்டோக்களுக்கான கட்டணங்கள் அதிகளவில் வசூலிக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

இதன் காரணமாகவும் வாடகை ஓட்டோ செலுத்துவோர் தொடர்பில் கிடைத்த பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பிலும் தீர்மானம் எடுப்பதற்காக நேற்று முன்தினம் சம்பந்தப்பட்ட ஓட்டோ சங்கத்தினர், மோட்டார் போக்குவரத்து திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதிநிதி மற்றும் அதனுடன் இணைந்ததாக வட மாகாண போக்குவரத்து அதிகார சபை தலைவர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை போன்ற முக்கியமான துறை சார்ந்த உத்தியோகத்தர்களை அழைத்து யாழ்.மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வாடகை ஓட்டோ ஓட்டுநர்கள் சம்பந்தமான பல விடயங்கள் ஆராயப்பட்டன. அதில் பொருத்தமற்ற - அளவுக்கதிகமான ஒலிகளை எழுப்பிச் செல்வது, அநாவசியமான கண்ணாடிகள் பொருத்தி இருப்பது மற்றும் தேசிய கொடியை அவமதிக்கும் வகையில் கிழிந்த-மாசுபடிந்த-வாகனங்களுக்கு பொருத்தமற்ற அளவிலான தேசியக்கொடிகளை பொருத்துதல் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

குறிப்பாக பயணிகள் அச்சப்படும் அளவுக்கு மட்டுமல்லாது வீதிகளில் பயணிப்போர் அச்சப்படும் அளவுக்கு உயர்ந்த ஒலிகளை எழுப்பும் கருவிகளை ஓட்டோக்களில் பொருத்துவது தடுக்கப்பட வேண்டும். அது போல வாடகை ஓட்டோ செலுத்துபவர்கள் மரியாதைக்குரிய ஆடைகளை அணிந்து நல்ல பழக்கவழக்கங்களை கொண்டிருக்கவேண்டும் போன்ற விடயங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது.

அத்தோடு பதிவு செய்யப்படாத வாடகை ஓட்டோக்களும் யாழ்ப்பாண நகர பகுதிகளில் தொல்லையாக இருப்பதாக மாநகர சபையினால் குறிப்பிடப்பட்டது. எனவே பதிவு செய்யப்படாத ஓட்டோக்களைப் பதிவு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டது.

அதேபோல மிக முக்கியமாக 2017 ஆம் ஆண்டு முதலாம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் ஒழுங்கு விதிக்கு அமைய நாடு முழுவதிலும் கட்டணம் வசூலிப்பது அந்தந்த ஓட்டோக்களுக்கு உரிய கட்டண மீற்றர் பொருத்தப்படவேண்டும்

கட்டண மீற்றர் பொருத்தப்படவேண்டும் என ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அது நடைமுறையில் இல்லை.

இதனால் பல மடங்கு கட்டணங்களை பொதுமக்கள் செலுத்தவேண்டி இருப்பதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.



போக்குவரத்து அதிகார சபையின் கணக்கெடுப்பின் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஓட்டோக்கள் சேவையில் உள்ளதாகவும் அதேபோல யாழ்ப்பாண நகரை பகுதியில் 2025 ஓட்டோக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக வாடகைக்கு அமர்த்தப்படுகின்ற சகல ஓட்டோக்களுக்கும் கட்டண மீற்றர் பொருத்தப்படவேண்டும். பொருத்தப்பட்டால் மாத்திரமே சேவையில் ஈடுபட அனுமதிக்க முடியும். ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கட்டண மீற்றர் பொருத்தப்படாத ஓட்டோக்களை வாடகை வண்டியாக பாவிப்பதற்கு அனுமதிக்க முடியாது என தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி மாநகர சபையும் அதற்குரிய ஒழுங்குகளை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விடயங்களுக்கு சம்பந்தப்பட்ட ஓட்டோச் சங்கத்தினர் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தனர்-என்றார்.

(அ-03)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கணிதக் கற்றல் உபகரண கண்காட்சி





யாழ்ப்பாணம், மே. 04

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித மன்றம் நடத்திய கற்றல் உபகரண கண்காட்சி கடந்த 2ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கலாசாலையில் இடம்பெற்றது

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி அருணாசலம் குகன் கலந்து கொண்டார். கணித மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் இ. இராஜபாலன் வாழ்த்துரை வழங்கினார்.

ஆரம்பக் கல்வி தொடக்கம் க.பொ.த. சாதாரண தரம் வரை கணிதம் கற்கும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய கற்றல் உபகரணங்களை ஆசிரிய மாணவர்கள் உருவாக்கி காட்சிப்படுத்தினர்.

(அ)

# லொறியுடன் மோதிய எம்.பியின் வாகனம்!

## 6 பேர் காயம்

கொழும்பு, மே. 04

பாராளுமன்ற உறுப்பினர் ஜயரத்ன ஹேரத் பயணித்த டிபெண்டர் ரக வாகனம் சிறிய லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

வாரியபொல நகரில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பான நேற்று முன்தினம் இரவு 9.30 அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த டிபெண்டர் வாகனம் அதிவேகமாக பயணித்ததன் காரணமாக முன்னால் சென்ற சிறிய லொறியுடன் மோதியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் லொறியில் பயணித்த 5 பேரும், பாராளுமன்ற உறுப்பினரின் சாரதியும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

காயமடைந்தவர்கள் வாரியபொல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(அ)

# வல்வெட்டித்துறை முத்துமாரிக்கு இன்று தேர்!

வடமராட்சி, மே 04

பிரசித்திபெற்ற வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளைய தினம் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. இதேநேரம், பிரசித்தி பெற்ற இந்திர விழாவை நடத்துவது தொடர்பிலும் இன்று முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-02)



## கிளிநொச்சி...

இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், எம். ஏ. சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், சிறீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அண்மைக்காலமாக, மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக உறுப்பினர்கள் பங்கேற்பது அபூர்வமாகவே இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 14ஆவது...

முள்ளிவாய்க்கால் மண்ணின் பிடியில் அடைக்கலம் அடைந்த ஈழத்துத்தமிழினத்தின் இதயத்தில் ஆழப்பதிந்த நாட்கள் கடந்துபோய் 14 ஆண்டுகள் நிறைவடையும் நாள் மே 18.

மனிதாபிமானத்தையும் மனித குல நலனையும் கையிலெடுத்து நவகாலனித்துவத்தை நிறுவும் கருவிகளாய் அவற்றை பாவித்து நிற்கும் இன்றைய நவீன உலக ஒழுங்கின் கர்த்தாக்கள் செயலின்றி பார்த்திருக்க, நடுநிலை வகிக்க வென்று வந்தவர்கள் நாதி இன்றி நாவடக்கம் காத்திருக்க, துடிக்கத்துடிக்க நாம் கொத்துக் குண்டுகளாலும் கதிரியக்க காரணிகளாலும் நாகரிக உலகம் மனித குலத்துக்கு ஒவ்வாது என தடை செய்த ஆயுதங்களாலும் போர் முறைகளாலும் முள்ளிவாய்க்கால் மண்ணில் பூவாய், பிஞ்சாய், காயாய், பழமாக வேறுபாடுகள் கடந்து இனப்படு கொலை செய்யப்பட்ட நாட்கள் நடந்து முடிந்து 14 ஆண்டுகள் கடந்து போய் மே 18உடன் நிறைவடைகின்றது.

முள்ளிவாய்க்கால் வாரத்தில் (மே 11-18), முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறி தமிழின படுகொலை நினைவுதினத்தை நீதி வேண்டிய பயணத்தில் வினைத்திறன்மிக்கதாக்க தமிழ்த் தேசியத்தை நாளாந்த தேசியமாக உள்வாங்கி அடுத்த கட்ட நகர்வுக்கான உத்திகளை வகுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இந்த நினைவேந்தல் தொடர்பான நிதி சேகரிப்புக்கள் தாய் நிலத்திலோ புலம்பெயர்த் தேசங்களிலோ முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பால் அனுமதிக்கப்படவில்லை என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## 4வருடங்களின்...

கொண்டது.

வண. கலாநிதி மெதகொட அபய திஸ்ஸ நாயக்க தேரரும் நியமிக்கப்பட்ட உறுப்பினராக செயல்படுகின்றார். நான்கு வருடங்களின் பின்னர் நடைபெற்ற இந்த ஆளும் சபை கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை தவிர, ஏனைய உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி நிதியத்தினூடாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை வினைத்திறன் உள்ளதாக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு விசேட வேலைத்திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

ஜனாதிபதி நிதியத்துக்காக அபிவிருத்தி லொத்தர் சபையினால் பெறப்படும் வருமானம் மற்றும் பல்வேறு நன்கொடையாளர்களின் வழங்கப்படும் நிதி என்பன பயன்படுத்தப்படுவதுடன், ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதிக்கும் வழங்கப்படவுள்ளது.

நிதியச் சட்டத்தின் அதிகாரங்களின் படி, இந்த நிதியம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, பொதுமக்களின் நலனுக்காக இந் நிதியம் பெரும் பணிகளை ஆற்றியுள்ளது.

வறுமை ஒழிப்பை முதன்மை நோக்கமாக கொண்ட ஜனாதிபதி நிதியம் நோயுற்றவர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்குவதற்கு அதிக பங்களிப்பை வழங்கியுள்ளதோடு, இதன் கீழ் பல்வேறு நோய்களுக்கான அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஜனாதிபதி நிதியத்துக்கு 12,0000 மருத்துவ உதவிக் கோரிக்கைகள் கிடைத்திருந்ததோடு, ஜனாதிபதியின் பணிப்புரை மற்றும் ஜனாதிபதியின் செயலாளரின் வழிகாட்டலின் கீழ், அவற்றை 31-12-2022 க்குள் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதன்படி, குவிந்து கிடந்த விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் நிறைவடைந்து, தகுதியான பயனாளிகளுக்கு உதவிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதோடு, இதற்காக 1,717 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நிதி செலவிடப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில், விண்ணப்பதாரர்களுக்கு மருத்துவ உதவி வழங்க பல ஆண்டுகள் சென்றதைக் காண முடிந்தது. இதற்கு ஒரு தீர்வாக, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத் குமாரவின் வழிகாட்டுதலின் கீழ், விண்ணப்பச் செயல்முறை ஒரு வார காலத்துக்கும் குறைந்த காலப்பகுதியில் விண்ணப்பதாரர்கள் நன்மைகளைப் பெறக்கூடிய வகையில் இந்த புதிய முறை திறம்படவும் எளிமையானதாகவும் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

மருத்துவச் சலுகைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் முக்கிய நகரங்களுக்கு அருகாமையில் அதிகமாக அமைந்துள்ளதால், கிராமப்புறங்களில் அமைந்துள்ள மருத்துவமனைகளின் பதிவைத் ஆரம்பிப்பதன் மூலம், தொலைதூரப் பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு கிராமப்புற பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை/ அறுவை சிகிச்சையைப் பெறுவதற்கான மருத்துவ உதவிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் ஜனாதிபதி நிதியத்தினால் நிதியுதவி வழங்கும் நோய்களுக்கு மேலதிகமாக நோயாளர்களின் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு சுகாதார அமைச்சின் சிபாரிசுடன் புதிய நோய்கள் உள்வாங்கப்பட உள்ளமையினால் அதிகளவான நோயாளர்கள் பயன்பெற முடியும்.

தற்போதைய பொருளாதார நிலை மற்றும் அறுவை சிகிச்சை/மருத்துவ செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து நோய்களுக்கும் மருத்துவ உதவியாக வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகையின் அளவை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் கீழ், நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி நிதியம் உதவியுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழ்...

வரைவில் கையொப்பமிடுவதற்கு 12 கட்சிகள் முன்வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. இதில், சமத்துவ கட்சி உள்ளிட்ட ஒருசில கட்சிகளே ஒப்பமிட்டுள்ளன.

நேற்றைய தினம் இந்த வரைவில் தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழரசு கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் ஒப்பமிடும் என்று அறிவிக்கப்பட்டபோதும் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் எவரும் ஒப்பமிடவில்லை. இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் மட்டும் இது தொடர்பில் க. வி. விக்னேஸ்வரன் எம். பியுடன் பேச்சு நடத்தி சென்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் - பிரதிநிதிகளை ஈழநாடு தொடர்பு கொண்டு கேட்டது.

இந்த வரைவை தயாரித்த க. வி. விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

ஆலோசனை குழுவை நியமனம் செய்வதன் மூலம் மாகாணத்தில் நின்று போயுள்ள அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்த முடியும். இதற்கு சட்டத்தில் இடமுள்ளது. எனினும், இந்த ஆலோசனை குழுவில் சிங்களவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற அச்சம் உள்ளது. ஆனால், அவ்வாறு நிகழாது தடுக்க முடியும். இது தொடர்பாக உரிய கட்சிகளுக்கு தெளிவுபடுத்தல்களை செய்துள்ளோம். அவர்கள் விரைவில் கையொப்பமிடுவார்கள்”, என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவிக்கையில்,

“இந்தக் கோரிக்கை தொடர்பில் நாம் பரிசீலித்து வருகிறோம். மாகாண சபை தேர்தலை இதனை காரணம் காட்டி ஜனாதிபதி பிற்போடுவதற்கு வசதியாக இருக்கும். எனவே, இதில் ஒப்பமிடப் போவதில்லை”

இதேவேளை, இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில் பேசவல்ல பிரதிநிதி ஒருவர் கூறுகையில், “இந்த வரைவுக்கு நாம் ஆதரவு வழங்கப் போவதில்லை என்று கூறினார்.

இதனிடையே, இந்த வரைவில் ஈ. பி. டி. பி. கட்சியும் ஒப்பமிடவில்லை என்று அறிய வருகின்றது. (ஐ)

## பிராந்திய...

நெருக்கமாக பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எயார் சீப் மார்ஷல் வி. ஆர். சௌத்ரி, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர வேண்டும் என்றும் இந்த விடயத்தில் தனது ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார். (ஐ)

## ஈ.பி.எவ்வுக்கு...

அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இறுதி தீர்மானங்கள் எவையும் எடுக்கப்படவில்லை. எனினும், இதனை அடிப்படையாகக் கொண்டு சில தரப்பினரால் போலி பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

அதற்கமையவே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் வதந்திகளை பரப்புகின்றனர். எனினும் இவை உண்மைக்கு புறம்பானவையாகும். தேசிய மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் பொருளாதார நிபுணர்களுடன் பரந்துபட்ட பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய சர்வதேச கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளும் இன்னும் நிறைவடையவில்லை. இதற்காக பிரான்ஸின் லசார்ட் மற்றும் கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனங்கள் வெளிநாட்டு கடன் வழங்குநர்களிடம் தொடர்ந்தும் பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றன.

இவற்றுடன் மத்திய வங்கி , நிதி அமைச்சு மற்றும் பொருளாதாரத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் ஏனைய நாடுகளின் நிதி அமைச்சு உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் நீண்ட பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றன. எவ்வாறிருப்பினும் எந்தவொரு தரப்பினருடனும் இதுவரையிலும் இறுதி தீர்மானம் எட்டப்படவில்லை.

நாட்டு பிரஜைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கடன் மறுசீரமைப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

எனவே, அரசாங்கம் எதை செய்தாலும் வெளிப்படை தன்மையுடன் செய்யும். அதன் காரணமாகவே இம்முறை நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது - என்றார். (ஐ)

## வேட்பாளரான...

அரச பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் தினேஷ் குணவர்த்தன சமர்ப்பித்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வேட்புமனு சமர்ப்பித்துள்ள அரச ஊழியர்கள் தொடர்பாக தேர்தல் நடத்தப்படும் வரைக்கும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தேர்தல் ஆணைக்குவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களை கருத்தில் கொண்டு இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. (ஐ)

## விகாரைக்கு...

பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் இன்னமும் இராணுவத்தின் பிடியில் உள்ளன. இந்த நிலையில், மக்களுக்கு சொந்தமான காணியை ஆக்கிரமித்து இராணுவத்தினர் விகாரை ஒன்றை அமைத்தனர். இந்த விகாரை ஜனாதிபதியின் பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்காவால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில், இந்த விகாரை கட்டுமானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், விகாரைக்காக இராணுவம் பிடித்துள்ள சுமார் 100 பரப்பு காணிகளை விடுவிக்குமாறும் வலியுறுத்தி நேற்று போராட்டம் நடைபெற்றது.

காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியின் தையிட்டி - கலைவாணி வீதி முகப்பில் நேற்று பிற்பகல் ஆரம்பித்த போராட்டம் பேரணியாக நகர்ந்து விகாரையின் நுழைவாயில் வரை சென்று அங்கு போராட்டம் நடைபெற்றது.

இதன்போது, சட்டவிரோத பௌத்த கட்டுமானத்தை அகற்ற வேண்டும், தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும், பௌத்த மயமாக்கல் - திணிப்பை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டன.

இந்தப் போராட்டம் காரணமாக விகாரை முன்பாக ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில், போராட்டம் நிறைவடைந்த பின்னர், அங்கிருந்து செல்ல முயன்ற போராட்டக்காரர்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் வீதியை முழுமையாக மறித்து கைது செய்ய முயன்றனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நேற்றிரவு ஏற்பட்டது.

வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் அழைப்பின்பேரில் நடை பெற்ற இந்தப் போராட்டத்தில் தையிட்டி பகுதி மக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், காணிக்கு சொந்தமானவர்கள், மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இந்திய அரசின் அனுமதி கிடைத்ததும் காங்கேசன் - காரைக்கால் கப்பல் சேவை

## கூறுகிறார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



கொழும்பு, மே. 04

**யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் காரைக்கால் இடையே பயணிகள் கப்பல் சேவையை முன்னெடுக்கவுள்ள நிறுவனத்துக்கு இந்திய அரசாங்கத்தின் சில அனுமதிகள் இதுவரை வழங்கப்படவில்லை என துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.**

குறித்த நிறுவனத்துக்கு அனுமதி கிடைத்தவுடன், பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும் என அவர் கூறினார்.

எனினும், காங்கேசன்துறையிலிருந்து பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், இம்மாதம் நடுப்பகுதியில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இண்ட் சிறி பெரி சேவிஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் ஏற்கனவே தெரிவித்திருந்தார். ஒரு வழி போக்குவரத்திற்கு 50 அமெரிக்க டொலர்கள் அறவிடப்படுமெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

65 கடல் மைல் தூரம் கொண்ட இந்த பயணத்திற்கு சுமார் 4 மணித்தியாலங்கள் தேவைப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை காலை 8 மணிக்கு காரைக்காலில் பயணத்தை ஆரம்பிக்கும் கப்பல் நண்பகல் 12 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடையவுள்ளதுடன், மீண்டும் காங்கேசன்துறையிலிருந்து பிற்பகல் 2 மணிக்கு பயணத்தை ஆரம்பிக்கும் கப்பல் மாலை 6 மணிக்கு காரைக்காலை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# இந்திய நிதியமைச்சரை சந்தித்த அமைச்சர் சப்ரி

கொழும்பு, மே 04

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் நேற்று சுமூகமான கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தென் கொரியாவில் இடம்பெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்கள் சபையின் 56 ஆவது வருடாந்த கூட்டத்தின் ஒரு அங்கமாக இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளின் நலனுக்கான பொருளாதார பங்காளிப்பு குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கும் அனைத்து உதவிகளுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இதன்போது நன்றி தெரிவித்தார்.

நிதி அமைச்சர்கள், மத்திய வங்கிகளின் ஆளுநர்கள், முக்கிய உலகளாவிய வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களின் மூத்த அதிகாரிகள் என சுமார் 4,000 பேர் சியோலில் ஒன்றுகூடியுள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுனர்கள் சபையின் 56 ஆவது வருடாந்த கூட்டம் நாளை வரை இடம்பெறவுள்ளது. (அ)

# தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்கள் மீண்டும் சேவையில்!

கொழும்பு, மே. 04

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்த அரச ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை கையளித்த அரச ஊழியர்கள் தாங்கள் போட்டியிடும் தொகுதியைத் தவிர அருகிலுள்ள உள்ளூராட்சித் தொகுதிகளில் வேலையில் ஈடுபட முடியும்.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் வரையில் அரச ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அவதானிப்புக்களை மேற்கொண்டுள்ளது.

குறித்த அவதானிப்புகளை கருத்திற்கொண்டு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புரவினால் அமைச்சரவைக்கு இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களுக்கு உரிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தேர்தல் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது என ஜானக வக்கும்புர குறிப்பிட்டார். (அ)

# ஜனாதிபதி இன்று லண்டன் பயணம்

## உலக தலைவர்களுடன் பேச்சு

கொழும்பு, மே 04

லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளவுள்ளார்.

லண்டனின் புராதனமான வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் விழாவில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உலகத் தலைவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

1953 ஆம் ஆண்டு மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்ட சுமார் 8,200 பேரிலிருந்தும் இம்முறை கலந்துகொள்வோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு 2200 பேருக்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராக உள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க இன்று வியாழக்கிழமை பிரிட்டன் செல்லவுள்ளார். கடந்த ஆண்டு செப்ரெம்பரில் தனது தாயார் இரண்டாம் எலிசபெத் மகா ராணியின் மறைவுக்குப் பின்னர் சார்ள்ஸ் மன்னர் அரியணை ஏறினார். (அ)

# மின்சார கட்டணத்தில் ஜூலையில் திருத்தம்!

கொழும்பு, மே. 04

இந்த வருடம் ஜூலை மாதம் மின்சார விலை மீளாய்வு மற்றும் திருத்தம் செய்யப்பட உள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட அரசாங்க கொள்கை மற்றும் அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அமைய, மின்சார விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டண விலையை ஆண்டுக்கு இருமுறை மறுஆய்வு செய்து திருத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# இலங்கையில் மீண்டும் டெங்கு-3 வைரஸ் பரவல்

கொழும்பு, மே. 04

சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய சோதனைகளின் படி, இலங்கையில் பல வருடங்களின் பின்னர் மீண்டும் "டெங்கு 3" வைரஸ் பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதம வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதனால் ஒருவருக்கு காய்ச்சல் இரு தினங்களுக்கு மேல் காணப்படுமாயின், டெங்கு பரிசோதனை நடத்துவதன் ஊடாக அதனை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

'டெங்கு 3" இற்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியோ, ஆன்டிபாடிகளோ இல்லை என கூறியுள்ள அவர், இந்த வைரஸ் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார். (அ)

# யாழ். ஊடகவியலாளர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே. 04

ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் ஊடக சுதந்திரத்தை வலியுறுத்தி நேற்று மதியம் ஊடக அமையத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

தமிழ் ஊடகப் படுகொலையை மூடி மறைக்காதே, ஊடக சுதந்திரம் எங்களின் சுதந்திரம், ஊடகங்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் அடக்காதே, ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்களுக்கு நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு ஊடகவியலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)




# விவசாயிகளுக்கு விசேட சலுகை

கொழும்பு, மே. 04

2023 ஆம் ஆண்டுக்கான பருவத்தில் நெல் பயிரிடுவதற்கு விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப யூரியா உள்ளிட்ட உரங்களை கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு உரம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று விவசாய அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

அரசாங்கத்தினால் உரம் கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்களை தீர்மானித்தவாறு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி உரம் கொள்வனவு செய்வதற்கு 01 ஹெக்ரேயருக்கு 20,000 ரூபாயும், 02 ஹெக்ரேயருக்கு 40,000 ரூபாயும் மானியமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.